# பஞ்சாகமங்கள்

**பாடம் 1**

## பஞ்சாகமங்கள் ஒரு அறிமுகம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ... 1**

**நவீன சிக்கலான அணுகுமுறைகள் ... 2**

**முன்கணிப்புகள் ... 3**

இயற்கைவாதம் ... 3

வரலாற்று வளர்ச்சி ... 4

**நூலாசிரியர் ... 7**

தெய்வீகப் பெயர்கள் ... 7

போலி தகவல்கள் ... 9

முரண்பாடுகள் ... 10

**வியாக்கியான உத்திகள் ... 12**

மூல விமர்சனம் ... 12

படிவ விமர்சனம் ... 13

பாரம்பரிய விமர்சனம் ... 15

மறு சீரமைப்பு விமர்சனம் ... 15

சமகால விமர்சனம் ... 16

**நவீன சுவிசேஷக சபையாரின் அணுகுமுறைகள் ... 17**

**முன்கணிப்புகள் ... 17**

அசாதாரணம் ... 17

வரலாற்று வளர்ச்சி ... 19

**நூலாசிரியர் ... 19**

வேத ஆதாரம் ... 20

மோசேயின் படைப்புரிமை ... 22

**வியாக்கியான உத்திகள் ... 31**

கருப்பொருள் சார் வியாக்கியானம் ... 31

வரலாற்று வியாக்கியானம் ... 32

இலக்கிய வியாக்கியானம் ... 34

**முடிவுரை ... 36**




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

நம்மிடம் வேதாகமம் இல்லாதிருந்திருந்தால் கிறிஸ்தவ விசுவாசம் எவ்வளவு வித்தியாசமாக இருந்திருக்கும் என்று நீங்கள் எப்பொழுதாவது யோசித்திருக்கிறீர்களா? தலைவர்கள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அறிவுறுத்தல்களை அனுப்புவார்கள், ஆனால் அவர்களின் கருத்துக்களை மதிப்பிடுவதற்கு எந்த வழியும் இருக்காது, மாறுபட்ட கருத்துகளுக்கு இடையில் நாம் நியாயமான முடிவைப் பெறமுடியாது.

மோசேயினுடைய காலகட்டத்தில் இஸ்ரவேல் மக்களில் பலருக்கு இது எப்படி இருந்திருக்கும். அவர்களின் மூதாதையர்கள் பண்டைய வரலாறு மற்றும் அவர்களின் முற்பிதாக்களின் கணக்குகளைக் கடந்து சென்றனர். தேவன் எப்படி இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்தார், அவருடைய பிரமாணங்களை எப்படி அவர்களுக்குக் கொடுத்தார் மற்றும் வாக்குத்தத்த நிலத்தை நோக்கி அவர்களை எப்படி வழிநடத்தினார் என்ற கதையை அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்களின் தற்போதைய சூழ்நிலைகளிலும், எதிர்காலத்திலும் தேவன் இஸ்ரவேல் மக்களை என்ன செய்யப்போகிறார் என்று அவர்கள் எதைகொண்டு விசுவாசிப்பார்கள்? இந்த விஷயங்களின் மீதுள்ள மாறுபட்ட கருத்துகளுக்கு இடையே அவர்கள் எப்படி நியாயமான முடிவுகளை அடைய முடியும்? இவ்வகையான கேள்விகளுக்கு, நாம் இப்போது பஞ்சாகமங்கள் என்று அழைக்கிறதான வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களை அவர்களின் விசுவாசத்தினுடைய தரமாக தேவன் வழங்கினார்.

*பஞ்சாகமங்கள்* என்பது நம்முடைய தொடரின் முதல் பாடமாகும், ”பஞ்சாகமங்கள் ஒரு அறிமுகம்” என்று நாம் அதற்கு பெயரிட்டுள்ளோம். இந்த பாடத்தில், ஆதியாகமம் முதல் உபாகமம் வரையிலான வேதாகமப் புத்தகங்கள் இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்திற்கான தரமாக எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிமுகப்படுத்துவோம்.

பஞ்சாகமங்கள் பற்றிய நமது அறிமுகம் இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரியும். முதலில், வேதாகமத்தின் இந்தப் பகுதிக்கான நவீன விமர்சன அணுகுமுறைகளை விவரிப்போம். இந்த அணுகுமுறைகள் வேதாகமத்தின் முழு அதிகாரத்தையும் மறுக்கும் மொழிபெயர்ப்பாளர்களின் கருத்துக்களைக் குறிக்கின்றன. இரண்டாவதாக, வேதாகமத்தின் முழு அதிகாரத்தையும் தேவ வார்த்தையாக உறுதிப்படுத்தும் வேத அறிஞர்களின் கருத்துக்களான நவீன சுவிசேஷக் கண்ணோட்டங்களை ஆராய்வோம். பஞ்சாகமங்கள் மீது நவீன விமர்சன அணுகுமுறைகளை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நவீன சிக்கலான அணுகுமுறைகள்

நமது பாடங்கள் வேறு திசையில் செல்லும் என்றாலும், நவீன வேத அறிஞர்கள் பஞ்சாகமங்கள் தேவனால் அருளப்பட்டது என்பதையும் அதன் அதிகாரத்தையும் மறுத்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். பஞ்சாகமங்கள் மோசேயின் நாட்களில் இஸ்ரவேல் மக்களின் சிறந்த நியாயப்பிரமாணங்களை கொடுத்தவரிடத்திலிருந்து வந்தது என்ற பாரம்பரிய யூத மற்றும் கிறிஸ்தவ பார்வையையும் அவர்கள் மறுத்தனர். பல விளக்கவுரையாளர்கள், ஆசிரியர்கள், போதகர்கள் மற்றும் பாமர மக்கள் கூட இந்த கருத்துக்களை ஆதரித்துள்ளனர், வேதத்தின் தீவிர மாணவர்கள் அவற்றைத் தவிர்ப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகும். இந்த காரணத்திற்காக, விமர்சன அறிஞர்கள் வேதாகமத்தின் இந்த பகுதியை எவ்வாறு கையாண்டார்கள் என்பது பற்றி நமக்கு சில புரிதல் இருப்பது மிக முக்கியம்.

> கடந்த 150 முதல் 200 ஆண்டுகளில், விமர்சன அறிஞர்கள் பஞ்சாகமங்கள் மீதான படிப்பில் அதிக கவனம் செலுத்தினர். சுவிசேஷ மார்க்கத்தாராகிய நாம் அந்த அணுகுமுறைகளில் பலவற்றில் உடன்படவில்லை என்றாலும், பல பழைய ஏற்பாட்டு அறிஞர்களினுடைய ஆலோசனைகளுக்கு நாம் சரியாக பதிலளிக்க வேண்டும் என்பதற்காக நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம். நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாமல், நாம் வெற்றிடத்தில் நமது வேதபாட வகுப்பை வெறுமனே செய்யக்கூடாது. மற்ற இடங்களில் சொல்லப்படும் அனைத்து வெளிச்சத்திலும் நாம் நமது அணுகுமுறைகளைக் கூற வேண்டும்.
>
> – Dr. ஜான் ஆஸ்வால்ட்

பஞ்சாகமங்கள் மீதான நவீன விமர்சன அணுகுமுறைகளைப் புரிந்து கொள்ள, நாம் மூன்று விமர்சனங்களைப் பார்ப்போம்: முதலாவதாக, முக்கியமான கண்ணோட்டங்களைப் பாதித்த சில முக்கியமான முன்கணிப்புகள்; இரண்டாவதாக, பஞ்சாகமங்களின் ஆசிரியர் மீதான விமர்சனக் கண்ணோட்டங்கள்; மூன்றாவதாக, குறிப்பிட்ட அறிஞர்கள் பின்பற்றிய பல குறிப்பிடத்தக்க விளக்க உத்திகள். இந்த அணுகுமுறைகளை பாதிக்கும் சில முன்கணிப்புகளை முதலில் கருத்தில் கொள்ளுங்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்கணிப்புகள்

பெரும்பாலும், வேதாகமத்தின் இந்தப் பகுதியின் நவீன விமர்சனக் கருத்துக்களானது, பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டின் மேற்கு ஐரோப்பாவில் அறிவொளியின் நிலையான மற்றும் தொடர்ச்சியான அறிவிலிருந்து நேரடியாக வெளிவருபவை.

நம்முடைய நோக்கங்களுக்காக, அறிவொளியிலிருந்து வளர்ந்த இரண்டு குறிப்பிடத்தக்க முன்கணிப்புகளில் கவனம் செலுத்துவோம். இந்த இரண்டு கண்ணோட்டங்களும் பஞ்சாகமங்களினுடைய வியாக்கியானங்களை ஆழமாக பாதித்துள்ளன. முதலில், இயற்கைவாதத்தின் கருத்தை நாம் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தின் வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய முன்கணிப்புகளைப் பார்ப்போம். இயற்கைவாதத்தைக் குறித்து முதலில் ஆரம்பிக்கலாம்.

## இயற்கைவாதம்

சுருக்கமாக, அறிவார்ந்த இயற்கைவாதம் என்பது அறிஞர்களின் ஆதிக்கம் செலுத்தும் நம்பிக்கையாகும், அதாவது, ஆவிக்குரிய உண்மைகள் இருக்குமானால், அவைகள் காணக்கூடிய உலகத்தின் மீது எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதே. இந்த காரணத்திற்காக, கல்விசார்ந்த ஆராய்ச்சியில் அவர்கள் இடம் பெறவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில், கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த படிப்புகள் உட்பட மேற்கில் உள்ள ஒவ்வொரு கல்வித் துறையிலும் இயற்கைவாதம் ஆதிக்கம் செலுத்தியது. வேதாகம ஆய்வுகளில் இயற்கைவாதத்தின் ஒரு முக்கிய விளைவு என்னவென்றால், பஞ்சாகமங்கள் தேவனால் அருளப்பட்டது என்ற யூத மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கையை நன்கு மதிக்கப்பட்ட அறிஞர்கள் நிராகரித்தனர். இந்த காரணத்திற்காக, பெரும்பாலான மக்கள் பொதுவாக பண்டைய கலாச்சாரங்களின் மத எழுத்துக்களைக் கையாண்ட அதே வழியில் பஞ்சாகமங்களையும் கையாண்டனர். இந்தப் பார்வையில், பஞ்சாகமங்களானது மனிதனுடைய எழுத்துக்களைப்போல அனைத்து வகையான பிழைகள், முரண்பாடுகள், வரலாறு மற்றும் பொய்யான இறையியல் குறித்த வேண்டுமென்ற தவறான சித்தரித்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இயற்கைவாதத்திற்கு வழிவகுத்த முன்முடிவுகள் நவீன அறிஞர்களை பஞ்சாகமங்களின் அதிகாரத்தையும் அது தேவனால் அருளப்பட்டது என்பதையும் நிராகரிக்க ஏதுவாக விடுவித்ததால், அவை இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தின் வரலாற்று வளர்ச்சி பற்றிய சில கண்ணோட்டங்களுக்கும் வழிவகுத்தன என்பது சுவாரஸ்யமானது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## வரலாற்று வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இயற்கைவாதமானது நாம் ”இயற்கையான வரலாற்றுவாதம்” என்று அழைப்பதற்கு வழிவகுத்தது. எந்த ஒரு விஷயத்தையும் புரிந்து கொள்வதற்கான சிறந்த வழி, அது இயற்கையான காரணங்களின் மூலம் காலப்போக்கில் எப்படி வளர்ச்சியடைந்தது என்பதைப் புரிந்துகொள்வதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் உயிரியலாளர்கள் பூமியில் வாழ்க்கை எவ்வாறு தோன்றியது மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பரிணமித்தது என்பதை விளக்க தங்களை அர்ப்பணித்தனர். மொழியியலாளர்கள் மனித மொழிகளின் வரலாற்று வளர்ச்சிகளைக் கண்டறிந்தனர். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பழங்கால பின்னணியையும் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தையும் சீரமைத்தனர். மேலும் இதைப்போலவே மதத் துறையில் உள்ள அறிஞர்கள் உலக மதங்களின் இயற்கையான, வரலாற்று பரிணாமத்தை விவரிப்பதற்கு முன்னுரிமை அளித்தனர்.

பெரிய மற்றும் ஆரம்பகால நவீன மேற்கத்திய அறிஞர்கள் மனித சமுதாயத்தின் வளர்ச்சியைப் புரிந்துகொள்வதற்காக உலக மதங்களின் பரிணாமத்தை சீரமைத்தனர். உதாரணமாக, பழங்கால மக்கள் முதன்முதலில் இயற்கையில் உள்ள பொருட்கள் அவர்களுடன் தொடர்புடைய ஆவியைக் கொண்டுள்ளது என்ற நம்பிக்கையைப் பின்பற்றும் பண்டைய பழங்குடி சமூகங்களை உருவாக்கினர். காலப்போக்கில், பண்டைய பழங்குடி சமூகங்கள் பல கடவுள் நம்பிக்கையான பலதெய்வத்தை பின்பற்றும் பெரிய தலைமைகளை உருவாக்கின. பல்வேறு தலைமைகள் பெரிய கூட்டமைப்புகளை உருவாக்கியதால், மதமானது பல கடவுள் நம்பிக்கையிலிருந்து தலைக் கடவுள் கோட்பாடுக்கு மாறத் தொடங்கியது, ஒரு கடவுள் எல்லா கடவுள்களிலும் மிகப் பெரியவர் என்ற நம்பிக்கையே தலைக்கடவுள் கோட்பாடாகும். இறுதியாக, பெரிய இராஜ்ஜியங்கள் மற்றும் பேரரசுகளின் வளர்ச்சியுடன், சக்திவாய்ந்த ராஜாக்கள் மற்றும் ஆசாரியர்கள் பெரும்பாலும் தங்கள் தேசங்களை தலைக்கடவுள் கோட்பாட்டிலிருந்து, ஒரே தேவனில் நம்பிக்கை வைத்தலை நோக்கி நகர்த்தினார்கள். இந்த இயற்கையான வரலாற்றுப் பார்வையில், மிகவும் வளர்ந்த இந்த கட்டத்தில் தான் மதத்தின் நெறிமுறைகள் சட்டமாக தொகுக்கப்படவோ எழுதப்படவோ தொடங்கின. இந்த காலத்திற்கு முன்பு, மதம் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு வாய்வழி மற்றும் சடங்கு ரீதியான பாரம்பரியங்கள் வழியாக மட்டுமே கடந்து சென்றது.

இப்போது, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதவியலாளர்கள் மதங்கள் இவ்வளவு எளிமையான முறையில் பரிணமித்தன என்ற இந்த யோசனையைப் பெரிதும் மதிப்பிழக்கச் செய்தனர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இந்த கண்ணோட்டங்கள் நவீன காலத்தின் ஆரம்பத்தில் பஞ்சாகமங்களை வேதாகம வல்லுநர்கள் கையாண்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விதங்களை ஆழமாக பாதித்தன. அவைகள் இன்றும் கூட வேதாகம நிபுணத்துவத்தை தொடர்ந்து பாதிக்கின்றன.

> ”விமர்சன நிபுணத்துவம்” என்று நாம் அழைப்பது பெரும்பாலும் பழைய ஏற்பாடானது ஒரு பண்டைய, நவீனம் குறைவான மதத்திலிருந்து மிகவும் சிக்கலான, அதி நவீனமான மதத்திற்கான நம்பிக்கைகளின் வளர்ச்சியை பிரதிபலிக்கிறது என்று கருதுகிறது, அதி நவீனமான மதம் நவீனம் குறைந்த மதத்தை விட சிறந்தது. அதைப் பற்றி நாம் சொல்லக்கூடிய சில விஷயங்கள் உள்ளன. ஒரு விஷயம், நேர்மறையாகக் கூறினால், தேவன் தன்னை எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதில் முன்னேற்றம் இருக்கிறது என்று நாம் கூறலாம். நாம் ”இயற்கையான வளர்ச்சி” என்று அழைக்கிறதான, தேவனைப் பற்றிய கோட்பாடுகள் மற்றும் கருப்பொருள்கள் மற்றும் கருத்துக்கள் விதையிலிருந்து முழு வடிவத்திற்கு வளர்கின்ற இடத்தை வேதாகமம் காட்டுகிறது. எனவே வேதாகமம் அதன் சொந்த முன்னேற்றத்தைக் குறித்த செய்தியைப் பற்றி பேசுகிறது. அதனால், உண்மையில், வேதாகமத்திற்குள்ளும், பஞ்சாகமங்களுக்குள்ளும் ஒரு வகையான வளர்ச்சி உள்ளது. தேவனுடைய வெளிப்பாட்டின் துவக்கத்திலிருந்து முழுமையாக பூக்கும் வரை இது ஒரு **இயக்க**மாகு**ம்**, நீங்கள் விரும்பினால், ஒரு பூ பூப்பதற்கு நேரம் கழித்த புகைப்படத்தை நீங்கள் கற்பனை செய்து பார்ப்பதைப் போன்றது. ஆனால், எதிர்மறையாகப் பேசுகையில், விமர்சன அறிஞர்கள் பொதுவாக மனித வரலாற்றைக் குறித்த பரிணாமம் அல்லது வளர்ச்சிக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர், இது முன்னேற்றத்தின் தவிர்க்க முடியாத தன்மையைக் கருதுகிறது… இப்போது, நாம் செய்ய வேண்டியது நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பார்த்து தவிர்க்க முடியாத முன்னேற்றம் என்பது ஒரு பெரிய கட்டுக்கதை என்று கண்டுகொள்வது. ஆமாம், நாம் முன்னேறுகிறோம், ஆனால் நாம் முன்னேறும்போது, நாமும் பகிர்கிறோம். எனவே, நவீனத்தின் அதிநம்பிக்கை பற்றி சில விஷயங்கள் உள்ளது அதாவது பழையதை மிகவும் தாழ்ந்ததாகக் கருதுகிறது, அதேசமயம், அது ஒரு தத்துவ அனுமானம், இது வேதாகமத்துக்குள் காணப்பட்ட ஒன்றல்ல.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

உலக மதங்களைப் பற்றிய ஆரம்பகால நவீன கண்ணோட்டங்களானது இஸ்ரவேல் மக்களினுடைய விசுவாசத்தின் வளர்ச்சியை வேதாகமம் சித்தரிக்கும் விதத்திலிருந்து தெளிவாக வேறுபட்டது. பஞ்சாகமங்கள் இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தை தொடர்ந்து ஒரே தேவனில் வைக்கும் விசுவாசமாக முன்வைக்கிறது. ஆதாம் மற்றும் ஏவாள், நோவா, முற்பிதாக்கள், இஸ்ரவேல் மக்களின் கோத்திரங்களின் தலைவர்கள் வரை, உண்மையுள்ளவர்கள் அனைவரும் எல்லாவற்றையும் உருவாக்கிய ஒரே தேவனை வணங்கினார்கள். மேலும், ஆதியாகமத்திலிருந்து நமக்குத் தெரிந்தவரை, இந்த ஆரம்ப கட்டங்களில், இந்த உண்மையான, ஒரே தேவனில் வைக்கும் நம்பிக்கையானது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு வாய்வழி மற்றும் சடங்கு மரபுகள் வழியாக கடத்தப்பட்டது.

பிறகு, பஞ்சாகமங்களின்படி, மோசேயின் நாட்களில் ஒரு தீர்க்கமான மாற்றம் நடந்தது. இந்த சமயத்தில், இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தினுடைய நெறிமுறைகள் சட்ட விதிப்படுத்தபடத் தொடங்கின. முதலில் தேவனுடைய பிரமாணங்களை உடன்படிக்கை மற்றும் பத்து கற்பனைகளின் புத்தகத்தில் எழுதியும், பின்னர் நாம் பார்க்க இருப்பதுபோல், இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தை வழிநடத்த பஞ்சாகமங்களின் மீதமுள்ள பகுதிகளை இயற்றியும் மோசே இஸ்ரவேல் மக்களை ஒரு தேசமாக்குவதற்கு தயார் செய்தார். எனவே, வேதாகமத்தின்படி, இஸ்ரவேல் மக்களின் மதமானது மோசேயின் காலத்திலிருந்து, இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு ராஜாவோ தேவாலயமோ இருப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே பரிசுத்த எழுத்துக்களை நோக்கி இருந்தது.

இந்த நன்கு அறியப்பட்ட வேதாகமக் கணக்கைப் போலவே, நவீன விமர்சனமானது இயற்கையான வரலாற்றுவாதத்தின் அனுமானங்களால் இந்த காலவரிசையை சாத்தியமற்றதாகக் கருதுகிறது. நவீன விமர்சன அறிஞர்கள் இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தின் வேதாகம சித்தரிப்பைப் புனரமைத்தனர். அனைத்து பண்டைய மதங்களும் எவ்வாறு உருவாகின என்ற நவீன கருத்துக்களுக்கு இணங்க அவற்றை மறுகட்டமைத்தனர். இந்த கண்ணோட்டத்தில், இஸ்ரவேல் மக்களின் வரலாற்றுக்கு முந்தைய மூதாதையர்கள் பழங்குடிகளின் ஆன்மவாதத்தை ஏற்றுக்கொண்டனர். பின்னர், இஸ்ரவேல் மக்களின் முற்பிதாக்கள் பலகடவுளில் வைக்கும் நம்பிக்கையை நோக்கி நகர்ந்தனர், ஏனெனில் அவர்களின் பழங்குடியினர் தலைமைகளில் ஒன்றிணைந்தனர். இந்தப் பார்வையில், இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்த ஒரு மோசே இருந்திருப்பாரானால், அவர் வழிநடத்திய இஸ்ரவேலர்கள் தலைக்கடவுள் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்களாக வகைப்படுத்தப்பட்ட பழங்குடியினரின் கூட்டமைப்பை விட அதிகம். மேலும், வேதவாக்கியங்களுக்கு மாறாக, விமர்சன வியாக்கியானம்செய்பவர்கள், சமூக வளர்ச்சியின் இந்த கட்டத்தில், இஸ்ரவேல் மக்களினுடைய விசுவாசத்தின் தரநிலைகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யாராவது எழுதியிருப்பதற்கு சாத்தியமில்லை என்று நம்பினர். இஸ்ரவேல் மக்களை இராஜாக்கள் ஆண்ட காலத்தின் ஆரம்பத்தில், இஸ்ரவேல் மக்களின் ராஜாக்கள் மற்றும் ஆசாரியர்கள் இஸ்ரவேல் மக்களினுடைய விசுவாசத்தை ஒழுங்குபடுத்த முயன்றபோது மட்டுமே இத்தகைய எழுதப்பட்ட தரநிலைகள் தோன்றியிருக்க முடியும் எனவே, விமர்சன அறிஞர்களின் கருத்துப்படி, இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்ட காலத்திலிருந்தே இஸ்ரவேல் மக்களின் மதம் பெருகிய முறையில் இப்புத்தகத்தின் மதமாக மாறியது.

வேதத்தை நோக்கிய நவீன விமர்சன அணுகுமுறைகள் மற்றும் இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தின் வரலாற்று வளர்ச்சியின் முன்முடிவுகளை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், நாம் நெருங்கிய தொடர்புடைய இரண்டாவது பிரச்சினைக்கு திரும்ப வேண்டும். இந்த கண்ணோட்டங்கள் பஞ்சாகமங்களினுடைய ஆசிரியர் மீதான விமர்சன அணுகுமுறைகளை எவ்வாறு பாதித்தன?

## நூலாசிரியர்

நாம் பார்த்தபடி, இஸ்ரவேலை இராஜாக்கள் ஆண்ட காலத்தில் மட்டுமே இஸ்ரவேலர்களின் விசுவாசம் சட்ட விதியாக்கப்படத் தொடங்கியது என்று விமர்சக வியாக்கியானம் செய்பவர்கள் நம்பினர். நிச்சயமாக, இந்த அனுமானம் பஞ்சாகமங்களை எழுதுவதில் மோசே ஈடுபட்டிருக்கவில்லை என்பதாகும். மாறாக, இந்த புத்தகங்கள் ஒரு நீண்ட, சிக்கலான செயல்முறையின் விளைவாக இருந்தன, இது பண்டைய வாய்வழி மரபுகளுடன் தொடங்கியது, அவை இஸ்ரவேலை இராஜாக்கள் ஆண்ட காலத்தில் பல்வேறு ஆவணங்களாகத் தொகுக்கப்பட்டன. இஸ்ரவேல் மக்களின் சிறையிருப்பின் காலத்திலும் அதற்குப் பின்னரும் மட்டுமே இந்த ஆவணங்கள் இப்போது நமக்குத் தெரிந்தபடி பஞ்சாகமங்களாகத் திருத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டன. இப்போது, வேதவாக்கியங்களைக் கற்கும் மாணவர்கள் பஞ்சாகமங்களினுடைய வளர்ச்சியின் இந்த நீண்ட வரலாற்றை பல அறிஞர்கள் நம்புகிறார்கள் என்று முதலில் கேட்கும்போது, எந்த ஆதாரங்கள் அதை ஆதரிக்கின்றன என்று அவர்கள் எப்போதும் ஆச்சரியப்படுகிறார்கள்.

விமர்சன நிபுணர்களால் வழங்கப்பட்ட மூன்று முக்கிய சான்றுகளை சுருக்கமாகக் கொண்டு பஞ்சாகமங்களின் ஆசிரியருக்கான இந்த அணுகுமுறையைப் பார்ப்போம். பஞ்சாகமங்களில் காணப்படும் தெய்வீகப் பெயர்களில் மாறுபாடுகள் என்பதுடன் தொடங்குவோம்.

### தெய்வீகப் பெயர்கள்

ஆரம்பகால விமர்சன வியாக்கியானம் செய்பவர்கள் பஞ்சாகமங்கள் தேவனுக்குப் பல பெயர்களைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டனர். மேலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வேறுபாடுகள் இஸ்ரவேல் மக்களின் விசுவாசத்தினுடைய நீண்ட பரிணாமத்திற்கு சான்றுகள் என்று அவர்கள் வாதிட்டனர். உதாரணமாக, சில நேரங்களில் எபிரெயப் பதமான אֱלֹהִים (*எலோஹிம்*) அல்லது "தேவன்" என்ற வார்த்தை பஞ்சாகமங்களில் பயன்படுத்தப்படுகிறது. மற்ற நேரங்களில், יהוה (*யேகோவா*) அல்லது "கர்த்தர்" என்று தேவன் அழைக்கப்படுகிறார். பஞ்சாகமங்கள் இந்த பதங்களை ஒன்றோடு ஒன்று இணைக்கிறது. மேலும் மற்ற பதங்களோடும் இணைக்கிறது, அதாவது "*யேகோவா எலோஹிம்*" அல்லது "தேவனாகிய கர்த்தர்" மற்றும் "*யேகோவா யீரே*" அல்லது "கர்த்தர் பார்த்துக்கொள்வார்." "*எல் எலியோன்*" அல்லது "உன்னத தேவன்" மற்றும் பெரும்பாலும் "சர்வ வல்ல தேவன்" என்று மொழிபெயர்க்கப்படும் "*எல் ஷடாய்*" என்றும் அழைக்கப்படுகிறார்.

இப்போது, பஞ்சாகமங்கள் தேவனுக்குப் பல்வேறு பெயர்களைப் பிரதிபலிக்கும்போது, இது அசாதாரணமானதாக இருக்காது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் பிற பழங்கால கிழக்கத்திய மதங்களின் தெய்வீகப் பெயர்கள் பற்றிய ஆராய்ச்சி, அதே ஆசிரியர்கள் தங்கள் கடவுள்களுக்கும் பல பெயர்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது. ஆயினும், ஆரம்பகால விமர்சன அறிஞர்கள் பஞ்சாகமங்களில் தேவனுடைய பெயர்களில் உள்ள மாறுபாடுகள் இது இயற்றப்பட்டதின் நீண்ட வரலாற்றை வெளிப்படுத்தியதாகக் கருதினர். தேவனுக்கான வெவ்வேறு பெயர்களானது ஒரு மூலமானது மற்றொரு மூலத்துடன் சேர்க்கப்படுவதைக் குறிக்கின்றன என்றும், இறுதியில் அவைகள் பஞ்சாகமங்களில் முடிந்தன என்றும் அவர்கள் நம்பினர்.

> நீங்கள் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது, தேவனுக்கு வெவ்வேறு பெயர்கள் இருப்பதை கவனிக்க அதிக நேரம் ஆகாது. ஆதியாகமம் 1 இல் தேவனுடைய பெயர் எலோஹிம். ஆதியாகமம் 2 இல், திடீரென்று, யேகோவா தேவன் என்ற பெயர் காணப்படுகிறது. விமர்சன அணுகுமுறைகள் இதை ஒரு சுவிசேஷ மார்க்கத்தாரின் அணுகுமுறையைவிட வித்தியாசமாகப் புரிந்து கொள்ளும். ஒரு விமர்சன அறிஞர் இவை வெவ்வேறு ஆதாரங்களில் இருந்து வந்தவை என்று கூறுவார்… சுவிசேஷ மார்க்கத்தார்களாக, நாம் பின்வாங்கி பெரிய சித்திரத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். தேவன் எலோஹிம் ஆவார். மற்றும் அவர் யேகோவாவும் ஆவார். எலோஹிம் என்றால் சர்வவல்லமையுள்ள தேவன், உலகம் முழுவதிலும் உள்ளவர், சிருஷ்டிகர், உலகின் அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் அந்த உயர்ந்த வல்லமையாகவும் இறுதி வடிவமாகவும் இருக்கிறவர். ஆனால் இஸ்ரவேல் தேசத்துடனான ஒரு உடன்படிக்கை உறவில், அவர் தன்னை

> மிகவும் தனிப்பட்ட பெயரில், யேகோவா தேவன் என்று வெளிப்படுத்துகிறார். அவர் தனது மக்களுக்காக இருப்பவரும் மற்றும் அவருடைய மக்களுடன் இருப்பவருமாகிய ”நான் நானாகவே இருக்கிறேன்” என்ற பெயருடையவர். இஸ்ரவேல் மக்கள் தேவனால் தெரிந் தெடுக்கப்பட்ட மக்கள் என்பதால் அது ஒரு உடன்படிக்கை பெயர் ஆகும்.
>
> – Dr. டேவிட் டாலி

தெய்வீக பெயர்களில் உள்ள மாறுபாடுகளுடன் அதிகமாக, பல விமர்சன அறிஞர்கள் ”போலி கணக்குகள்” என்று அழைக்கப்பட்டவற்றின் மீது கவனத்தை ஈர்ப்பதன் மூலம் மோசேயின் ஆகமங்களினுடைய ஆசிரியர் மீதான தங்கள் கருத்துக்களை ஆதரித்துள்ளனர்.

## போலி தகவல்கள்

பஞ்சாகமத்தில் பல வேத பகுதிகள் ஒன்றுக்கொன்று ஒத்திருப்பதைப் பார்ப்பது கடினமானதல்ல. ஆனால் விமர்சன வியாக்கியானம் செய்பவர்கள் இந்த பகுதிகள் வெவ்வேறு குழுக்களிடையேயான வெவ்வேறு வாய்வழி மரபுகளை பிரதிபலிக்கின்றன என்றும் இந்த செயல்முறைகளால் இந்த தகவல்கள் பஞ்சாகமங்களில் எழுதப்பட்டது என்றும் வாதிட்டனர்.

உதாரணமாக, ஆதியாகமம் 1:1–2:3 மற்றும் ஆதியாகமம் 2:4-25 ஆனது “இரண்டு சிருஷ்டிப்பின் விவரங்கள்” என்று வியாக்கியானம் செய்பவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். ஆதியாகமம் 12:10-20; 20:1-18; மற்றும் 26:7-11 இல் ஆபிரகாம் மற்றும் ஈசாக்கு பொய் சொல்லி தங்களுடைய மனைவிகளை அழிவுக்கு உட்படுத்தின விவரங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பாரம்பரிய யூத மற்றும் கிறிஸ்தவ விளக்கவுரையாளர்களும் இந்த ஒற்றுமைகளை நியாயமான வழிகளில் விளக்கியுள்ளனர். இந்த விவரங்கள் எழுதப்பட்டு பின்னர் பஞ்சாகமத்தில் இணைக்கப்பட்ட பல்வேறு வாய்வழி மரபுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று விமர்சன அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மூன்றாவது இடத்தில், விமர்சன அறிஞர்கள் பஞ்சாகமங்களில் முரண்பாடுகளாக அவர்கள் கருதுவதை சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த முரண்பாடுகள் என்று அழைக்கப்படுவது வேதாகமத்தினுடைய நூலாசிரியரின் இந்தப் பகுதியின் சிக்கலான மறுகட்டமைப்புகளை ஆதரிக்கின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## முரண்பாடுகள்

உதாரணமாக, அவர்கள் அடிக்கடி யாத்திராகமம் 12:1-20 மற்றும் உபாகமம் 16:1-8 இல் பஸ்காவுக்கான விதிமுறைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை குறிப்பிட்டிருக்கிறார்கள். யாத்திராகமம் 20:1-17 மற்றும் உபாகமம் 5:6-21 இல் உள்ள பத்து கட்டளைகளுக்கு இடையிலான வேறுபாடுகளை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மீண்டும், பாரம்பரிய யூத மற்றும் கிறிஸ்தவ மொழிபெயர்ப்பாளர்கள் இவை மற்றும் பிற வேறுபாடுகளை எவ்வாறு சமரசம் செய்ய முடியும் என்பதைக் காட்டியுள்ளனர். ஆனால் விமர்சன வியாக்கியானம் செய்பவர்கள் அவற்றை நீண்ட, சிக்கலான வரலாறாகிய வாய்மொழி மரபுகள் மற்றும் எழுதப்பட்ட ஆதாரங்களின் பிரதிபலிப்பாகவும் அவை இன்றைக்கு நாம் வைத்திருக்கிறபடி பஞ்சாகமங்களாக ஒன்று சேர்க்கப்பட்டன என்ற விதத்திலும் பார்த்தனர்.

> நீங்கள் குறிப்பாக வேதாகமத்தையும் பஞ்சாகமங்களையும் வாசிக்கும்போது, நீங்கள் பல்வேறு வகையான இலக்கியங்களை எதிர்கொள்கிறீர்கள். சில சமயங்களில் நீங்கள் அதை வாசிக்கும்போது, ஆதியாகமம் புத்தகம் தொடங்கும் போது நீங்கள் ஆதியாகமம் 1:1–2:3… போன்ற விஷயங்களை வாசிக்கிறீர்கள்… ஏழு நாட்களில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கை உருவாக்கும் தேவனுடைய ஒரு படம் நமக்கு கிடைக்கிறது. தேவன் தனது வார்த்தையால் உருவாக்குகிறார், இது தேவன் வல்லமையுள்ளவர், தேவன் சிருஷ்டிகர், தேவன் தமது சாயலாக மனிதகுலத்தை உருவாக்குகிறார் என்ற தேவனைப் பற்றிய வல்லமையுள்ள அறிக்கையாகும். பின்னர் அடுத்த அதிகாரம், 2:4-25 இல், நமக்கு சிருஷ்டிப்பைக் குறித்த மற்றொரு கதை உள்ளது, அவை ஒன்றன் பின் ஒன்றாக உள்ளன. நீங்கள் அதைப் பார்க்கும்போது, சிலர் முரண்பாடுகளைக் காண்பார்கள், ஏனென்றால் இப்போது தேவனானவர் கர்த்தராகிய தேவன் என்று அழைக்கப்படுவதை நாம் காண்கிறோம். வார்த்தையினால் எல்லாவற்றையும் உண்டாக்குகிற இந்த தேவனாக இருப்பதற்குப் பதிலாக, உண்மையாக இறங்கி வருகிற தேவனைக் காண்கிறோம்; அவர் மக்களை உருவாக்குகிறார். அவர் மண்ணிலிருந்து ஒரு மனுஷனை உருவாக்குகிறார், அவன் முதல் மனுஷன். பின்னர் அவர் முதல் மனுஷியை மனுஷனிலிருந்து உருவாக்குகிறார். எனவே, நீங்கள் தேவனைப் பார்க்கிறீர்கள், காணக்கூடாத சிருஷ்டிகரான தேவனாக இருப்பதற்குப் பதிலாக, தேவன் கீழிறங்கி வந்து, மனுஷனுடைய முறைமைப்படி, அவரது

> கைகளால் எல்லாவற்றையும் நடத்துகிறார்… ஆனால் மற்றொரு கதையானது முற்றிலும் இதனை முழுமையாக்குகிறதே தவிர, முரண்பாடல்ல… உண்மையில் முரண்பாடுகள் இருந்தால் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும், பழங்கால மக்கள் இவற்றைப் பார்க்கவில்லை என்று நாம் உண்மையில் நினைக்கிறோமா? அதாவது, அது ஒரு முக்கியமான பகுதி. அவர்கள் முட்டாள் மக்கள் அல்ல. அது ஒரு வேறுபட்ட காலம், வேறுபட்ட கலாச்சாரம், ஆனால் அவர்களுக்கு இன்னும் மூளை இருக்கிறது, அவர்களின் ஞானத்தில் அவர்கள் இந்த விஷயங்களை ஒன்றாக வைத்திருக்கிறார்கள். இதைப் போல இரண்டாவது கதை வல்லமை நிறைந்த செயல்களைச் செய்கிற தேவனை நமக்குக் காட்டுகிறது. இறையியலில் தேவனை சர்வவல்லதேவன், சிருஷ்டிப்புக்குள் வரும் தேவன் என்று அழைக்கிறோம்… மேலும் வேதத்தை வாசிப்பதற்கான உண்மையுள்ள வழி சந்தேகத்துடன் வாசிப்பதல்ல, மாறாக இறுதியில் அதைப் புரிந்துகொள்ளும் உணர்வோடு வாசிப்பது என்று நான் நினைக்கிறேன். உங்களுக்கு தெரியும், எனக்கு கேள்விகள் இருக்கலாம், ஆனால் அது ஒரு விசுவாசத்தைத் தேடும் புரிதல், மற்றும் அந்த நாளின் முடிவில், வேதத்தில் என்ன இருக்கிறது என்பது தேவன் வேதத்தில் என்ன இருக்க விரும்புகிறார் என்று நான் நம்புகிறேன், ஒரு வாசகனாக என்னுடைய வேலை அதை கவனத்துடன் கேட்பது ஆகும், குறிப்பாக எனக்குச் சிரமமாகத் தோன்றும் இடங்களில், தேவன் உண்மையில் இந்த இரண்டு வெவ்வேறு விஷயங்களை சில சமயங்களில் இணைப்பதன் மூலம் என்ன சொல்கிறார் என்று பார்க்க முயற்சி செய்ய வேண்டும். ஆனால் அதற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும், ஏனென்றால் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நேரங்களில் அந்த இரண்டு வெவ்வேறு வகையான படங்கள் இன்னொரு சமயத்தில் இருப்பதை விட ஒரு சமயத்தில் அர்த்தமுள்ளதாகப் பேசலாம்.
>
> – Dr. பிரையன் டி. ரஸ்ஸல்

இப்போது நாம் நவீன விமர்சன அணுகுமுறைகளை அவற்றின் முன்முடிவுகள் மற்றும் நூலாசிரியர் பற்றிய பார்வைகளின் அடிப்படையில் பார்த்தோம், மோசேயின் ஆகமங்களைக் கையாண்டதால் விமர்சன அறிஞர்கள் பின்பற்றிய சில முக்கிய விளக்க உத்திகளை நாம் கருத்தில் கொள்ளலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வியாக்கியான உத்திகள்

இந்த விஷயங்களைச் சுருக்கமாகக் கூற பல வழிகள் உள்ளன, ஆனால் நவீன விமர்சன அறிஞர்களின் ஐந்து முக்கியமான விளக்க உத்திகளைப் பார்ப்போம். இந்த உத்திகளை மூல விமர்சனத்தில் தொடங்கி அவர்கள் உருவாக்கிய வரிசையில் நாம் கருத்தில் கொள்வோம்.

## மூல விமர்சனம்

மூல விமர்சனம் அல்லது ”இலக்கிய விமர்சனம்” என்று முதலில் அழைக்கப்பட்ட இது, கே. ஹெச். கிராஃப் என்பவர், பழைய ஏற்பாட்டினுடைய *த ஹிஸ்டாரிக்கல் புக்ஸ்* ஆப் த ஒல்ட் டெஸ்டமன்ட் என்ற தலைப்பில் 1866 இல் வெளியிடப்பட்ட அவருடைய படைப்பில் உருவானது. இது நன்கு அறியப்பட்ட வியாக்கியானம் செய்பவரான ஜூலியஸ் வெல்ஹாசன் 1883 இல் வெளியிட்ட *புரோலோகோமெனா டு த ஹிஸ்டரி ஆப் இஸ்ராயேல்* என்கிற தனது படைப்பில் செம்மைப்படுத்தப்பட்டது.

மற்ற அனைத்து பாரம்பரிய மத எழுத்துக்களைப் போலவே, பஞ்சாகமங்கள் வாய்மொழி மரபுகளிலிருந்து வளர்ந்ததாக மூல விமர்சகர்கள் நம்பினர். ஆனால் அவர்கள் இஸ்ரவேல் மக்களை இராஜாக்கள் ஆண்ட காலத்தில் தோன்றிய சுயாதீனமான எழுத்து மூலங்களிலிருந்து வந்ததாகக் கருதும் பஞ்சாகமங்களின் பகுதிகளை அடையாளம் கண்டு விளக்குவதில் தங்கள் கவனத்தைக் குவித்தனர்.

வெல்ஹாசனின் சொற்களைப் பின்பற்றி, ஆரம்பகால இஸ்ரவேல் மக்களை ராஜாக்கள் ஆண்ட காலத்தில் எழுதப்பட்ட, பஞ்சாகமங்களின் ஆரம்பகால ஆவண மூலமானது, பொதுவாக யேகோவாகாரர்களை “ஜே” (J) என்று கருதியது. இந்த பெயரைக் கொண்டிருப்பதால், இந்த எழுதப்பட்ட மூலத்துடன் அடையாளம் காணப்பட்ட வேத பகுதிகளில் தேவனின் முக்கிய பெயர் ”*யேகோவா தேவன்*” - ஜெர்மன் மொழியில் ”ஜெ” (J) என்று உச்சரிக்கப்படுகிறது, அதாவது ஆங்கிலத்தில் ”*ஜெகோவா*” என்று இந்தப் பெயரை உச்சரிப்பது போல. ஆதியாகமம் மற்றும் யாத்திராகமம் புத்தகங்களில் ”ஜே” (J) பகுதிகள் சிதறிக்கிடக்கின்றன. கி.மு. 950 இல் சாலமோனின் நாட்களில் மோசேயின் ஆகமங்களின் பகுதிகள் முதலில் யூதா தேசத்தில் எழுதப்பட்டதாக மூல விமர்சகர்கள் வாதிட்டனர். இந்த கண்ணோட்டத்தில், ”ஜெ” (J) வேத பகுதிகளானது பண்டைய காலங்களைப் பற்றிக் கூறின ஒரு ஆவணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன மற்றும் எருசலேமில் தாவீதினுடைய வம்சத்தால் இஸ்ரவேலர்களின் மதம் மற்றும் சமூகத்தின் மையப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டை ஆதரித்தன.

பஞ்சாகமங்களினுடைய இரண்டாவது எழுதப்பட்ட மூலம் எலோஹிம் எழுத்தாளரை ”ஈ” (E) என்று கருதுகிறது, ஏனென்றால் தேவன் பொதுவாக இந்த வேத பகுதிகளில் *எலோஹிம்* என்று அழைக்கப்படுகிறார். ”ஈ” (E) சம்பந்தப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காரியங்கள் ஆதியாகமம் மற்றும் யாத்திராகமத்திலும் காணப்படுகிறது. இந்த கோட்பாட்டின் படி, ”ஈ” (E) மூலங்கள் இஸ்ரவேல் தேசம் இரண்டு ராஜ்யங்களாகப் பிரிந்த பிறகு வடக்கில் கி.மு. 850 இல் எழுதப்பட்டன. தாவீதின் வம்சத்தை விமர்சிக்கும் ”ஈ” (E) எழுத்துக்கள் வடக்கு, தீர்க்கதரிசன கருத்துக்களை ஊக்குவித்தன.

மூன்றாவது இலக்கிய மூலம் டி (”D”) அல்லது உபாகம ஆசிரியர் என அழைக்கப்பட்டது. ”டி” (“D”) கூறுகள் முதன்மையாக உபாகமம் புத்தகத்தில் மற்றும் எப்போதாவது பஞ்சாகமங்களின் மற்ற பகுதிகளில் மட்டுமே தோன்றுவதால் இந்த பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சுமார் கி. மு. 622 இல் யோசியா ராஜாவின் சீர்திருத்தங்களுக்கும் கி. மு. 586 இல் பாபிலோனியர்களிடத்தில் எருசலேமின் வீழ்ச்சிக்கும் இடைப்பட்ட காலமாக இந்த கூறுகளின் தேதி கருதப்படுகிறது. ஒரு பொதுவான கோட்பாட்டில், “டி” (”D”) என்பது வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து யூதா தேசத்திற்கு மாறிய லேவியர்களின் வேலையைக் குறிக்கிறது. இந்த லேவியர்கள் தாவீதின் வீட்டிற்கு விசுவாசமாக இருந்தனர், ஆனால் விமர்சனமும் செய்தனர்.

இறுதியாக, பஞ்சாகமங்களினுடைய வளர்ச்சியில் நான்காவது பெரிய இலக்கிய மூலம் பொதுவாக “பி” (”P”) என்று அழைக்கப்படுகிறது, இது ஆசாரிய எழுத்தாளர் அல்லது எழுத்தாளர்களைக் குறிக்கிறது. ஒரு பொதுவான மறுகட்டமைப்பில், “பி” (”P”) என்பது கி. மு. 500 மற்றும் கி. மு. 400 க்கு இடையில் லேவியராகமத்தை தொகுத்தும் பஞ்சாகமங்களினுடைய மற்ற பகுதிகளைத் ஒன்று திரட்டி திருத்தம் செய்தவர்களுமாகிய ஆசாரியர்களின் குழு ஆகும். இந்த மறுகட்டமைப்பின்படி, ”பி” (“P”) இஸ்ரவேல் மக்களில் மீதியுள்ளவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு சமூக ஒழுங்கு மற்றும் ஆராதனை முறைமைகளை நிர்வகிக்கும்படியாக பஞ்சாகமங்களை வடிவமைத்தது.

இப்போது, இருபதாம் நூற்றாண்டில், திறமையான அறிஞர்கள் மூல விமர்சனத்தின் எந்த அம்சத்தையும் சவால் செய்யாமல் விட்டுவிட்டார்கள். ஆயினும்கூட, இந்த கண்ணோட்டங்களின் தடயங்கள் இன்னும் பஞ்சாகமங்களைப் பற்றிய ஒவ்வொரு விமர்சன விளக்கவுரையிலும் தோன்றுகிறது.

## படிவ விமர்சனம்

மோசேயின் ஆகமத்தை நோக்கிய முக்கியமான அணுகுமுறைகளின் இரண்டாவது முக்கிய உத்தி ”படிவ விமர்சனமாக” கருதப்படுகிறது.

1901 இல் எழுதப்பட்ட *த லெஜண்ட்ஸ் ஆஃப் ஜெனசிஸ்* என்ற ஹெர்மன் குன்கெலின் படைப்புடன் பழைய ஏற்பாட்டு ஆய்வுகளின் ஒரு சிறப்புத் துறையாக படிவ விமர்சனம் தொடங்கியது. குன்கல் மற்றும் அவரைப் பின்பற்றியவர்கள் மூல ஆதாரத்தின் முக்கிய கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டனர், ஆனால் அவர்கள் பஞ்சாகமங்களினுடைய வளர்ச்சியின் ஆரம்பகால அம்சங்களின் மீது கவனம் செலுத்தினர். பஞ்சாகமங்களினுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எழுதப்பட்டதான மூலங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, படிவ விமர்சகர்கள் இஸ்ரவேல் மக்களை ராஜாக்கள் ஆண்ட காலத்திற்கு முந்திய வாய்வழி மரபுகள் என்று அவர்கள் நம்பும் விஷயத்தில் கவனம் செலுத்தினர்.

படிவ விமர்சனம் பிரபலமாக இருந்த காலத்தில், கல்வியறிவற்ற பழங்குடி கலாச்சாரங்களில் வாய்வழி மரபுகள் செயல்பட்ட முறைகளை அறிஞர்கள் குறிப்பிட்டனர். பஞ்சாகமங்களின் ஆவண மூலங்களுக்கு வழிவகுத்ததான தூய, திறன் வாய்ந்த, இலக்கியத்திற்கு முந்தைய பாரம்பரியங்களைத் தேடியதால் படிவ விமர்சகர்கள் இந்த ஆய்வுகளைப் பயன்படுத்தினர்.

படிவ விமர்சன முறை அடிப்படையில் இரு வகையாக இருந்தது: ஒருபுறம், படிவ விமர்சகர்கள் புராணங்கள், நாட்டுப்புறக் கதைகள், இதிகாசங்கள், காதல் கதைகள், காவியங்கள் மற்றும் உவமைகள் போன்ற பழங்கால வாய்மொழி வடிவங்கள் அல்லது வகைகளைக் கண்டறிய பத்திகளை பகுப்பாய்வு செய்தனர். மறுபுறம், அவர்கள் இந்த இலக்கிய நடைகளை "*சிட்ஸே இம் லெபென்*" அல்லது இந்த வாய்மொழி பாரம்பரியங்களின் "வாழ்க்கை அமைப்புகள்" என்று அழைக்கப்படும் கலாச்சார சூழல்களுடன் தொடர்புபடுத்தினர். இந்த சூழல்கள் வழிபாடு, பழங்குடி மக்களின் முகாம்கள், குடும்ப அறிவுறுத்தல், உள்ளூர் நியாயசங்கங்கள் மற்றும் அதைப் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

உதாரணமாக, படிவ விமர்சகர்கள் பலர் ஆதியாகமம் 32:22-32 இல் உள்ள பெனியேலில் யாக்கோபு தேவனோடு போராடிய கணக்கை ஆரம்பத்தில் ஒரு பழங்கால பழங்குடியினர் திறந்தவெளியில் நெருப்பைச் சுற்றி சொல்லிவந்த ஒரு கதையாகக் கருதினர். இது ஆரம்பத்தில் யாப்போக்கு நதியின் கரையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட, மந்திர நிகழ்வுகளின் கதைகளிலிருந்து வளர்ந்தது என்று அவர்கள் வாதிட்டனர். இந்த மறுகட்டமைப்பில், யாக்கோபு எனப்படும் ஒரு பழங்குடி நபருடன் இந்த கதை தொடர்புடையது என்பது மிகவும் பின்னாட்களில் தான் உருவானது.

படிவ விமர்சனம் வேதாகம உரைகளினுடைய கட்டமைப்புகள் மற்றும் முறையான அம்சங்களின் முக்கியத்துவத்தைச் சரியாக வலியுறுத்தியது. ஆனால், மூல விமர்சனத்தைப் போல, படிவ விமர்சனமும் பல்வேறு வழிகளில் சவால்களுக்குள்ளானது. படிவ விமர்சனத்தின் மீதான சவால்களானது குறிப்பாக வாய்மொழி வடிவங்கள் மற்றும் வேதாகம உரைகளுக்குப் பின்னால் உள்ள அமைப்புகளின் ஊக மறுகட்டமைப்புகளில் கவனம் செலுத்துகின்றன. எது வேத புத்தகம் என அளவிடும் கோலில் பஞ்சாகமங்கள் இருந்தாலும், இன்றும்கூட பல விமர்சன அறிஞர்களை கேள்விக்குரிய மறுகட்டமைப்புகளை நோக்கி திருப்புவதை படிவ விமர்சனம் கொண்டுள்ளதைக் காண்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பாரம்பரிய விமர்சனம்

விமர்சன அறிஞர்கள் மோசேயின் ஆகமங்களை விளக்கிய மூன்றாவது முக்கிய வழி பெரும்பாலும் பாரம்பரிய விமர்சனம் அல்லது பாரம்பரிய - வரலாற்று விமர்சனம் என்று அழைக்கப்படுகிறது.

மூல மற்றும் படிவ விமர்சனத்தின் முடிவுகளின் அடிப்படையில், பாரம்பரிய விமர்சகர்கள் எப்படி பழமையான வாய்மொழி பாரம்பரியங்கள் மற்றும் எழுதப்பட்ட உரைகள் சிக்கலான இறையியல் மற்றும் அரசியல் முன்னோக்குகளாக வளர்ந்தன என்பதில் கவனம் செலுத்தினர். 1948 இல் வெளியிடப்பட்ட, *எ ஹிஸ்டரி ஆஃப் பென்டடூக்கல் ட்ரெடிஷன்ஸ்* என்ற புத்தகத்தில் மார்ட்டின் நோத், மற்றும் 1957 இல் வெளியிடப்பட்ட, *தியாலஜி ஆப் ஓல்ட் டெஸ்டமெண்ட்* என்ற புத்தகத்தில் ஜெர்ஹார்ட் வான் ராட் போன்ற முன்னணி அறிஞர்கள், பஞ்சாகமங்கள் பல்வேறு பாரம்பரியங்களின் செல்வாக்கை எவ்வாறு பிரதிபலித்தன என்று கேட்டனர்.

மற்ற காரியங்களுடன், பாரம்பரிய விமர்சகர்கள் பஞ்சாகமங்களில் காணப்படும் போட்டியிடத்தக்க இறையியல் நம்பிக்கைகளின் தொகுப்பாக அவர்களின் நம்பிக்கையை அடையாளம் கண்டனர். சிருஷ்டிப்பு, முற்பிதாக்கள், எகிப்திலிருந்து வெளியேறுதல் மற்றும் வாக்குத்தத்த நிலத்தின் வெற்றி போன்ற பாடங்களில் பல்வேறு பாரம்பரியங்களின் தொகுப்புகளை பஞ்சாகமங்கள் எவ்வாறு பிரதிபலித்தன என்பதை அவர்கள் குறிப்பிட்டனர். அவர்கள் இஸ்ரவேல் மக்களின் கோத்திரங்கள், தாவீதின் சிங்காசனம் மற்றும் எருசலேம் தேவாலயம் பற்றிய கருத்துக்களை ஆராய்ந்தனர், சொல்லப்படுவதற்கு இவை ஒரு சிலதே. மேலும், இந்த இறையியலின் இந்த சிக்கலான பிரிவுகள் பஞ்சாகமங்களில் காணப்படும் பல முக்கிய கருப்பொருள்களை ஆழமாக பாதித்ததாக அவர்கள் நம்பினர்.

மீண்டும், பாரம்பரிய விமர்சனத்தின் பெரும்பாலான குறிப்பிட்ட முடிவுகள் பல ஆண்டுகளாக கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. ஆயினும், பழைய ஏற்பாட்டை வியாக்கியானம்செய்பவர்கள் இஸ்ரவேலில் உள்ள பாரம்பரியத்தின் பல்வேறு பிரிவுகளைப் பிரதிபலிக்கும் பத்திகளைப் பற்றிப் பேசும்போது இந்த அணுகுமுறையின் தடயங்களை நாம் பார்க்க முடியும்.

## மறு சீரமைப்பு விமர்சனம்

விமர்சன மொழிபெயர்ப்பாளர்கள் பஞ்சாகமங்களினுடைய வளர்ச்சியை அணுகிய நான்காவது முக்கிய வழி மறு சீரமைப்பு விமர்சனம் என்று அழைக்கப்படுகிறது. "மறு சீரமைப்பு" என்ற சொற்றொடர் குறிப்பிடுவது போல, இந்த உத்தி இன்று நமக்குத் தெரிந்தபடி கற்பனையான ஆவணங்கள் எவ்வாறு பஞ்சாகமங்களில் ஒன்றாகத் திருத்தப்பட்டன என்பதை மையமாகக் கொண்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை விளக்கும் விதமாக புதிய ஏற்பாட்டு ஆய்வுகளில் இருபதாம் நூற்றாண்டில் மறு சீரமைப்பு விமர்சனம் உருவாகத் தொடங்கியது. மறு சீரமைப்பு விமர்சகர்கள் இந்த வேறுபாடுகளானது முன்னர் எழுதப்பட்ட பதிவுகளைத் திருத்தி மறுவடிவமைப்பதால் ஏற்பட்டவை என்று நம்பினர்.

இதே போன்ற நுட்பங்கள் பஞ்சாகமத்திற்கும் பயன்படுத்தப்பட்டன. ”J”, ”E” மற்றும் ”D” போன்ற முந்தைய எழுத்து மூலங்களை வெவ்வேறு எழுத்தாளர்கள் எவ்வாறு எடுத்துக்கொண்டு பஞ்சாகமம் அதன் இறுதி வடிவத்தை அடையும் வரை அவற்றை ஒன்றாக பிணைத்தார்கள் என்பதை விளக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அணுகுமுறை குறிப்பாக ”P” யின் தாமதமான தலையங்கப் பணியில் கவனம் செலுத்தியது.

மறுசீரமைப்பு விமர்சனம் இன்று வேதாகமத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள வரிசைப்படி ஆதியாகமம் முதல் உபாகமம் வரையுள்ள புத்தகங்களில் கவனத்தை ஈர்த்தது. ஆனால் மறுசீரமைப்பு விமர்சனம் மூல, வடிவம் மற்றும் பாரம்பரிய விமர்சனத்தின் முடிவுகளுடன் கணிசமாக எந்தவித வேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை.

## சமகால விமர்சனம்

இந்த கட்டத்தில், சமகால விமர்சனத்தை வகைப்படுத்தும் சில போக்குகளையோ, அல்லது பஞ்சாகமத்திற்கான தற்போதைய செல்வாக்கு மிக்க விமர்சன அணுகுமுறைகளையோ நாம் குறிப்பிட வேண்டும்.

சமீபத்திய தசாப்தங்களில், பல முன்னணி விமர்சன வியாக்கியானம் செய்பவர்கள் பழைய முக்கியமான வரலாற்று புனரமைப்புகளுக்கு அப்பால் செல்ல முயன்றனர். அதற்கு பதிலாக, அவர்கள் பஞ்சாகமத்தின் பாரம்பரிய எபிரெய உரையின் குறிப்பிடத்தக்க இறையியல் ஒற்றுமை மற்றும் ஆழத்தில் கவனம் செலுத்தியுள்ளனர். இந்த அணுகுமுறைகள் சொல்லாட்சி விமர்சனம், வேத விதிமுறை சார் விமர்சனம் மற்றும் புதிய இலக்கிய விமர்சனம் போன்ற பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளன. ஜெப ஆலயம் மற்றும் சபை மூலம் இது நமக்கு வழங்கப்பட்டிருப்பதால் பஞ்சாகமத்தை வியாக்கியானம் செய்வதில் அவைகள் அனைத்தும் கவனம் செலுத்துகின்றன. பஞ்சாகமத்தின் இறுதி வடிவத்தை கையாளும் முறைகள் பழைய முக்கியமான அணுகுமுறைகளை விட நம்பிக்கைக்குரியவைகளாக இருக்கின்றன. ஆனால் இந்த சமகால அணுகுமுறைகள் எந்தப் பலனைத் தரும் என்பதை காலம் மட்டுமே சொல்லும்.

இந்த பஞ்சாகம அறிமுகத்தில், வேதாகமத்தின் இந்தப் பகுதிக்கான நவீன விமர்சன அணுகுமுறைகளின் சில முக்கிய அம்சங்களை ஆராய்ந்தோம். இப்போது நாம் இந்த பாடத்தின் இரண்டாவது முக்கிய தலைப்பான பஞ்சாகமம் பற்றிய நவீன சுவிசேஷக சபையாரின் கண்ணோட்டங்களுக்குத் திரும்ப வேண்டும். இன்று சுவிசேஷக சபையார் வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களை எப்படி அணுகுகிறார்கள்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நவீன சுவிசேஷக சபையாரின் அணுகுமுறைகள்

நம் நோக்கங்களுக்காக, சுவிசேஷக சபையாரை வேதாகமத்தின் முழு அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்களாக நாம் இங்கு வரையறுத்துள்ளோம் என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். சுவிசேஷக மார்க்கத்தார் இந்த நம்பிக்கையை எப்போதும் அதே வழிகளில் பயன்படுத்தவில்லை என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் நாம் பார்ப்பது போல், வேதத்தின் அதிகாரத்திற்கான இந்த அர்ப்பணிப்பு, நவீன விமர்சன அறிஞர்களைக் காட்டிலும் மிகவும் வித்தியாசமாக பஞ்சாகமத்தை கையாள சுவிசேஷக மார்க்கத்தாரை வழிநடத்துகிறது.

நமது முந்தைய விவாதத்தின் படி பஞ்சாகமம் பற்றிய நவீன சுவிசேஷக கண்ணோட்டங்களை சுருக்கமாகக் கூறுவோம். முதலில், நம்மை வழிநடத்த வேண்டிய சில முக்கியமான முன்கணிப்புகளைப் பார்ப்போம். இரண்டாவதாக, பஞ்சாகமத்தின் எழுத்தாளர் பற்றிய சுவிசேஷக கண்ணோட்டங்களைக் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, பல முக்கிய சுவிசேஷ வியாக்கியான உத்திகளை நாம் ஆய்வு செய்வோம். சில முக்கியமான சுவிசேஷ முன்கணிப்புகளை முதலில் பார்ப்போம்.

## முன்கணிப்புகள்

முக்கியமான மற்றும் சுவிசேஷ கண்ணோட்டங்களை வேறுபடுத்தும் இரண்டு முன்கணிப்புகளுக்கு நம்மை நாம் மட்டுப்படுத்திக் கொள்வோம். முதலில், அமானுஷ்யத்தின் மீதான நமது நம்பிக்கையை ஆராய்வோம். இரண்டாவதாக, இஸ்ரவேலின் விசுவாசத்தின் வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய நமது முன்கணிப்புகளைப் பார்ப்போம். முதலில், அமானுஷ்யத்தின் மீதான நமது நம்பிக்கையை ஆராய்வோம்.

### அசாதாரணம்

> ”அசாதாரணம்” என்பது ”இயற்கை” என்பதிலிருந்து வேறுபட்ட நமது நவீன மொழியாகும், ஏனெனில், நிச்சயமாக, நாம் தேவனை நம்பினால், தேவன் எல்லா விஷயங்களிலும் செயல்படுவார் என்று நாம் நம்புகிறோம். ஆனால் ஸ்காட்லாந்தை சேர்ந்த நாஸ்திக தத்துவவாதி டேவிட் ஹியூம் என்பவர் அந்த வகையான வித்தியாசத்தை உருவாக்கி, ”இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்பாட்டை நம்புவதற்கு நமக்கு காரணம் இல்லை” என்று கூறியிருப்பதால், அது ஒரு

> பிரச்சனையாக இருந்திருக்கிறது. வேதாகமத்தின் நம்பகத்தன்மைக்கு எதிராக பலர் வாதிட்டதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம், ஏனென்றால் வேதாகமம் அற்புதங்களால் நிறைந்துள்ளது, அற்புதங்கள் நடக்காது என்று தெரியும் என்று சொல்கிறார்கள். சரி, அற்புதங்கள் நடக்காது என்று நமக்கு ஏன் தெரியும்? ஏனென்றால் டேவிட் ஹியூம் அதை ”நிரூபித்தார்”. நீங்கள் மறுபடியும் அவருடைய வாதத்தைப் பாருங்கள், அவருடைய வாதம் மிகவும் நன்றாக இல்லை. நம்மிடம் நேரில் கண்ட சாட்சிகள் இல்லை, அற்புதங்கள் இருப்பதாக கூறும் நம்பத்தகுந்த சாட்சிகள் யாரும் நிச்சயமாக இல்லை. இன்று நாம் அதை சோதிக்க முடியாது என்பது தான் உண்மையில் அவருடைய வாதத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். இன்னும், ஹியூமின் நாளில் கூட, தேவன் அற்புதங்களைச் செய்தார் என்பதற்கான நம்பத்தகுந்த சாட்சிகள் இருந்தனர், இன்று நமக்கு அதிக சாட்சிகள் உள்ளன … மேலும் அவை இன்று நடக்குமானால், தேவன் கிரியை செய்த போது இரட்சிப்பின் வரலாற்றில் எந்த அளவுக்கு நடந்திருக்கும் என்பது எவ்வளவு நிச்சயம்.
>
> – Dr. கிரெய்க் எஸ். கீனர்

தேவன் பொதுவாக வரலாற்றை தெளிவான வடிவங்களைப் பின்பற்றும் வழிகளில் வழிநடத்துகிறார் என்று வேதாகமம் கற்பிக்கிறது. பகுத்தறிவும் அறிவியலும் தேவனின் ஈவுகள், அவை இந்த வடிவங்களை அறிய உதவுகின்றன. இந்த காரணத்திற்காக, சுவிசேஷ மார்க்கத்தார்கள் பஞ்சாகமம் பற்றிய பகுத்தறிவு மற்றும் அறிவியல் ஆராய்ச்சியை சரியாக மதிக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில், இயேசுவைப் பின்பற்றுபவர்களும் தேவன் உலகில் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தன்னை தொடர்ந்து ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார் என்பதை அறிவார்கள். தேவன் சாதாரணமான செயல்முறைகள் மற்றும் இயற்கை காரணங்கள் இல்லாமலும், அதற்கு அப்பாலும், எதிராகவும் செயல்படுகிறார். இந்த நம்பிக்கை பஞ்சாகமம் பற்றிய நமது ஆய்வை பல வழிகளில் பாதிக்கிறது. ஆனால் குறிப்பாக, இந்த வேதவாக்கியங்கள் எழுதப்படும்போது தேவன் மேற்பார்வையிட்டார் என்று இது நமக்கு உறுதியளிக்கிறது. எனவே, அவை அவருடைய முழு அதிகாரப்பூர்வமான மற்றும் நம்பகமான வார்த்தைகளாகும். நிச்சயமாக, பஞ்சாகமம் உண்மையில் என்ன சொல்கிறது என்பதோடு நமது விளக்கங்களை குழப்பாமல் இருக்க நாம் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய வியாக்கியானங்கள் எப்போதும் சரிப்படுத்தக்கூடியவை. ஆனால் ஒரு சுவிசேஷக் கண்ணோட்டத்தின் படி, பஞ்சாகமம் உண்மையில் எது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உண்மை என்று கூறுகிறதோ அது உண்மைதான், ஏனென்றால் அது தேவனால் அருளப்பட்டது.

அமானுஷ்யம் பற்றிய நமது முன்கணிப்புகள் இஸ்ரவேலின் நம்பிக்கையின் வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய முன்கணிப்புகளுக்கு நேரடியாக வழிவகுக்கிறது.

## வரலாற்று வளர்ச்சி

நாம் பார்த்தபடி, இஸ்ரவேலின் விசுவாசம் பண்டைய கிழக்கில் உள்ள மற்ற மதங்களைப் போலவே இயற்கையான வழிமுறைகளால் வளர்ந்ததாக நவீன விமர்சன அறிஞர்கள் வாதிட்டனர். ஆனால் சுவிசேஷ மார்க்கத்தார்கள் இஸ்ரவேலின் விசுவாசம் விசேஷித்த தெய்வீக வெளிப்பாடுகள் மூலம் வளர்ந்ததாக நம்புகின்றனர். தேவன் உண்மையில் முதலில் ஆதாம் மூலமாகவும் பின்னர் நோவா மூலமும் தன்னை நேரடியாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெளிப்படுத்தினார். அவர் இஸ்ரவேலின் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருடனும் பேசினார். அவர் எரியும் புதரில் மோசேயிடம் உரையாற்றினார். அவர் சினாய் மலையில் இஸ்ரவேலுக்கு தனது நியாயப்பிரமாணத்தை வெளிப்படுத்தினார். இந்த வகையான வெளிப்பாடுகள் இஸ்ரவேலின் நம்பிக்கை பண்டைய கிழக்கில் உள்ள மற்ற மதங்களை விட வித்தியாசமாக வளர காரணமாக அமைந்தது. நிச்சயமாக, தேவனின் பொதுவான கிருபையும் சாத்தானின் செல்வாக்கும் இஸ்ரவேலின் நம்பிக்கைக்கும் பிற நாடுகளின் மதங்களின் நம்பிக்கைக்கும் இடையேயான ஒற்றுமைக்கு வழிவகுத்தது. ஆனால் இஸ்ரவேலின் நம்பிக்கை வெறுமனே இயற்கையாக உருவாகவில்லை. பஞ்சாகமம் போதிப்பது போல, தேவன் அமானுஷ்யமாக இஸ்ரவேலின் ஆரம்பகால நம்பிக்கை வளர வழிவகுத்தார்.

நவீன சுவிசேஷ கண்ணோட்டங்களையும், பஞ்சாகமத்துடனான முக்கிய அணுகுமுறைகளுடன் முரண்படும் முன்கணிப்புகளையும் நாம் கருத்தில் கொண்டோம். இந்த கண்ணோட்டங்கள் பஞ்சாகமத்தின் எழுத்தாளர் பற்றிய மாறுபட்ட நம்பிக்கைகளுக்கு வழிவகுத்தன. மோசேயின் நாட்களில் இருந்துதான் பஞ்சாகமம் வந்திருக்கலாம் என்ற கருத்தை விமர்சன அறிஞர்கள் நிராகரிக்கின்றனர். ஆனால் சுவிசேஷ மார்க்கத்தார்கள் நீண்டகாலமாக பஞ்சாகமம் மேசேயினால் தான் எழுதப்பட்டது என்ற யூத மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றனர்.

# நூலாசிரியர்

பஞ்சாகமத்தை யார் எழுதியது என்பதற்கான சுவிசேஷக் கண்ணோட்டங்களை ஆராய, நாம் இரண்டு திசைகளில் பார்ப்போம். முதலில், இந்த கண்ணோட்டத்திற்கான சில வேத ஆதாரங்களை நாம் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, ”மோசேயின் படைப்புரிமை” என்று அழைக்கப்படுவதை நவீன சுவிசேஷ மார்க்கத்தார்கள் எப்படி நம்புகிறார்கள் என்பதை நாம் விளக்குவோம். மோசேயின் படைப்புரிமைக்கான சில வேத ஆதாரங்களுடன் ஆரம்பிக்கலாம்.

## வேத ஆதாரம்

மோசே பஞ்சாகமத்தின் எழுத்தாளர் என்ற பாரம்பரியக் கண்ணோட்டத்திற்கு வேதாகமத்தில் போதுமான சான்றுகள் உள்ளன. ஆனால் நேரத்தின் பொருட்டு, புதிய ஏற்பாட்டில் இருந்து ஆதாரங்களுடன் தொடங்கி, வேதத்தின் மூன்று தனித்துவமான பகுதிகளிலிருந்து ஒரு சில வேத பகுதிகளை மட்டுமே நாம் கருத்தில் கொள்வோம். இயேசு சொன்ன லூக்கா 24:44 யைக் கவனியுங்கள்:

> மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறும் (லூக்கா 24:44).

இங்கே, இயேசு அவர் காலத்தில் இருந்த பழைய யூதர்களைப் போலவே பழைய ஏற்பாட்டை மோசேயின் ஆகமங்கள், தீர்க்கதரிசனங்கள் மற்றும் சங்கீதங்கள் என்று மூன்று பிரிவுகளாகக் குறிப்பிட்டார். இந்த பெயர்கள் மூலம், இயேசு மோசேயுடன் பஞ்சாகமம் அல்லது தோராவை தொடர்புபடுத்தினார் என்பதை தெளிவாக லூக்கா சுட்டிக்காட்டினார்.

யோவான் 5:46 இல் பஞ்சாகமத்தின் எழுத்தாளர் மோசே என்று இயேசு குறிப்பிட்டார்:

> நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே (யோவான் 5:46).

இயேசுவின் சொந்த சாட்சியுடன் கூடுதலாக, மற்ற புதிய ஏற்பாட்டுப் பகுதிகளும் பஞ்சாகமத்தின் குறிப்பிட்ட பகுதிகள் மோசேயிடமிருந்து வருவதாக குறிப்பிடுகின்றன. மாற்கு 7:10, யோவான் 7:19, ரோமர் 10: 5, மற்றும் 1 கொரிந்தியர் 9: 9 போன்ற இடங்களில் இதை நாம் பார்க்கிறோம்.

உண்மையில், மோசே தான் எழுத்தாளர் என்பதற்கான புதிய ஏற்பாட்டு ஆதரவு பழைய ஏற்பாட்டின் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டது. மேலும் பல சமயங்களில், பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் பஞ்சாகமத்தை மோசேயுடன் தொடர்புபடுத்துகின்றன. உதாரணத்திற்காக, 2 நாளாகமம் 25:4 யை கவனிக்கவும்:

> மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி [அமத்சியா] செய்தான் (2 நாளாகமம் 25:4).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதே போன்ற பழைய ஏற்பாட்டு வேத பகுதிகள் மோசேயை பஞ்சாகமத்துடன் தொடர்புபடுத்துகின்றன. எஸ்றா 3:2 மற்றும் 6:18; மற்றும் நெகேமியா 8:1 மற்றும் 13:1 போன்ற பகுதிகள் இதற்கு உதாரணங்கள்.

பொதுவாக பஞ்சாகமத்தின் எழுத்தாளரைப் பற்றியதான புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டின் சாட்சியம் பஞ்சாகமம் அதன் எழுத்தாளரைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கண்டிப்பாகச் சொன்னால், பஞ்சாகமத்தின் பெரும்பாலான பகுதிகளை எழுதியது யாரென்று கூற முடியாது. உபாகமத்தின் முதல் வசனத்தைத் தவிர, இந்த புத்தகத்தின் ஆரம்பத்திலோ அல்லது முடிவிலோ அவருடைய படைப்புரிமையைக் குறிக்கும் வகையில் மோசேயின் பெயர் இல்லை. ஆனால் பண்டைய கிழக்கில் இது அசாதாரணமான காரியம் அல்ல. வேதத்திலும் இது அசாதாரணமானது அல்ல. உண்மையில், மோசே தேவனிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றார் என்றும் பஞ்சாகமத்தின் அமைப்பிற்கு பொறுப்பேற்றார் என்றும் பஞ்சாகமம் வெளிப்படையான அறிக்கைகளை தருகிறது. உதாரணமாக, யாத்திராகமம் 20:18–23:33 -ல் காணப்படும் உடன்படிக்கையின் புத்தகத்தை மோசே எழுதியதாக யாத்திராகமம் 24:4 சொல்கிறது. லேவியராகமம் 1:1-2 இல் லேவியராகமத்தில் உள்ள விதிமுறைகள் மோசே மூலம் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்டதை நாம் அறிவோம். உபாகமம் 31:1 மற்றும் 32:44 இல், மோசே உபாகமம் புத்தகத்தில் உள்ள உரைகளை வழங்கியதாக நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. மொத்தத்தில், பஞ்சாகமத்தின் முக்கிய பகுதிகளின் உள்ளடக்கங்களைப் பெறுவதிலும் பிறருக்கு கடத்துவதிலும் மோசே தீவிரமாக ஈடுபட்டதாக பஞ்சாகமம் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறுகிறது.

இது போன்ற பல வேத சான்றுகள், சுவிசேஷ மார்க்கத்தார்கள் ஏன் பஞ்சாகமத்தின் எழுத்தாளர் பற்றிய விமர்சன ஊகங்களுக்கு எதிராக வலுவாக நிற்கிறார்கள் என்பதை விளக்குகின்றன. தெளிவாக, மோசேயின் வாழ்க்கைக்குப் பிறகு பஞ்சாகமம் எழுதப்பட்டது என்று கருதும் முக்கியமான புனரமைப்புகளை வேதம் ஆதரிக்கவில்லை. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் சாட்சியத்தை நாம் பின்பற்றினால், மோசே தான் பஞ்சாகமத்தை எழுதியிருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க முடியும்.

> பஞ்சாகமம் தன்னை முக்கியமாக மோசேயின் ஆக்கமாக காட்டிக் கொள்கிறது. நிச்சயமாக, யாத்திராகமம் முதல் உபாகமம் வரை மோசே ஒரு முக்கிய கதாபாத்திரங்களில் ஒருவராவார். மேலும் இந்த உரை பெரும்பாலும் மோசேயின் காலத்திலிருந்தே உள்ளதாக சான்றளிக்கிறது. உதாரணமாக, உடன்படிக்கை புத்தகத்தை எழுதும்படி மோசேக்கு யேகோவா சொன்னார் என்று யாத்திராகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது யாத்திராகமம் 21 முதல் 23 வரை ஆகும். மோசேயிடமிருந்து தொடர்ச்சியான உரைகள் மற்றும்

> பிரமாணங்களை நாம் பெற்றுள்ளோம் என்று லேவியராகமம் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணாகமம் புத்தகத்தில் மோசே தான் முக்கிய கதாபாத்திரம். உபாகமம் புத்தகத்தில் மோசே நிகழ்த்திய தொடர்ச்சியான உரைகள் நமக்குக் கிடைத்துள்ளன, மேலும் மோசே இந்தப் பகுதியை எழுதி ஆசாரியரிடம் ஒப்படைத்ததாக உபாகமம் புத்தகத்தில் பல முறை நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. மோசே தான் முழுக்க முழுக்க உபாகமம் புத்தகத்தை எழுதினார் என்று இதற்கு அர்த்தமில்லை, ஆனால் புத்தகத்தின் குறிப்பிடத்தக்க பகுதிகளை, புத்தகத்தின் பெரும்பகுதியை, மோசே எழுதி பின்னர் ஆசாரியரிடம் ஒப்படைத்தார் என்று உபாகமம் புத்தகமே சொல்கிறது. உதாரணமாக, உபாகமத்தில், அவர் இறுதி எழுத்தாளராக இருந்தாலும் சரி, இறுதி விவரிப்பாளராக இருந்தாலும் சரி, குறைந்தது 90% புத்தகத்தை மோசே எழுதியிருக்கலாம்.
>
> – Dr. கோர்டான் எச். ஜான்ஸ்டன்

மோசே தான் எழுத்தாளர் என்பதன் அடிப்படை கருத்து வேத ஆதாரங்களால் ஆதரிக்கப்படுவதைக் கண்ட பிறகு, நாம் இரண்டாவது காரியத்தை கருத்தில் கொள்ள வேண்டும். நவீன சுவிசேஷ மார்க்கத்தார்கள் மோசேயின் படைப்புரிமையைப் பற்றி புரிந்து கொண்டது என்ன?

## மோசேயின் படைப்புரிமை

பஞ்சாகமம் பற்றிய விமர்சனக் கருத்துக்களுக்கு சுவிசேஷ மார்க்கத்தார்கள் பதிலளித்ததால், அவர்கள் தங்கள் பதில்களை பல்வேறு வழிகளில் செம்மைப்படுத்தினர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், பஞ்சாகமத்தின் ”மோசேயின் படைப்புரிமை” பற்றி பேசுவது பொதுவானதாகிவிட்டது.

எட்வர்ட் ஜே. யங் 1949 இல் வெளியிட்ட *இன்ட்ரோடக்ஸன் டு தி ஓல்ட் டெஸ்டமென்ட்* என்கிற புத்தகத்தில் இந்த கண்ணோட்டத்தை சுருக்கமாகக் கூறிய விதத்தை கவனியுங்கள்:

> மோசே பஞ்சாகமத்தை எழுதியதை நாம் உறுதிப்படுத்தும் போது, அவரே ஒவ்வொரு வார்த்தையையும் எழுதினார் என்பது அர்த்தமல்ல … [அவர்] ஏற்கனவே எழுதப்பட்ட ஆவணங்களின் சில பகுதிகளைப் பயன்படுத்தியிருக்கலாம். மேலும், தேவ ஆவியானவரால் அருளப்பட்டதன் கீழ், பின்னர் சிறிய சேர்த்தல்களும் திருத்தங்களும் கூட இருந்திருக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இருப்பினும், கணிசமாக மற்றும் அடிப்படையில், இது மோசேயின் தயாரிப்பு ஆகும்.

இப்போது, சுவிசேஷ மார்க்கத்தார்கள் மோசேயின் படைப்புரிமை பற்றிய இந்த கண்ணோட்டத்தின் விவரங்களை பல்வேறு வழிகளில் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் ஒரு வகையில் அல்லது இன்னொரு வகையில், நாம் எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டிய மூன்று காரணிகளை நினைவூட்டுவதற்காக "மோசேயின் படைப்புரிமை" பற்றி பேசுகிறோம்: மோசே பயன்படுத்திய ஆதாரங்கள், பஞ்சாகமம் எழுதப்பட்ட செயல்முறை, மற்றும் மோசேயின் நாட்களுக்குப் பிறகு நடந்த பஞ்சாகமம் புதுப்பிக்கப்படுதல். மோசே பயன்படுத்திய ஆதாரங்களை முதலில் கருத்தில் கொள்வோம்.

**ஆதாரங்கள்.** தேவன் தன்னை மோசேக்கு வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தினார் என்று வேதம் சொல்கிறது. உதாரணமாக, தேவன் தனது சொந்த விரலால் பத்து கட்டளைகளை எழுதினார். உடன்படிக்கை புத்தகத்தில் சீனாய் மலையில் தேவன் மோசேக்குக் கொடுத்த பிரமாணங்கள் உள்ளன. ஆனால், வேதாகமத்தின் பல பகுதிகளைப் போலவே, மோசே பஞ்சாகமங்களை எழுதியபோது கூடுதல் ஆதாரங்களையும் பயன்படுத்தியதற்கான அறிகுறிகள் உள்ளன.

ஒருபுறம், அவர் பலவிதமான வாய்வழி மரபுகளிலிருந்து எடுத்திருக்கலாம். உதாரணமாக, மோசே தனது குழந்தை பருவத்தில் தனது பிறந்த தாய் மற்றும் விரிவாக்கப்பட்ட குடும்பத்திலிருந்து சில விஷயங்களைக் கற்றுக்கொண்டார். மேலும், யாத்திராகமம் 18: 17-24 இல் நாம் பார்க்கிறோம், மோசே தனது மாமனாரான மீதியானியனாகிய ஜெத்ரோவின் அறிவுறுத்தலை ஏற்று நடந்தார்.

> ஆதி வரலாறு அல்லது வேறு சில பகுதிகள் உட்பட, பஞ்சாகமத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள வாய்வழி மரபுகளைப் பற்றி நாம் பேசும் போது, அதற்கு வெளிப்படையாக உறுதியான ஆதாரங்கள் இல்லாததால், அதை முழுமையாக நம்ப முடியாது. அது "வாய்வழி" என்று நீங்கள் கூறும்போது, அது முழுவதுமாக எழுதப்படவில்லை என்று அர்த்தம். ஒரு நிமிடம் இதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். மோசே இந்த கதைகள் எல்லாவற்றையும் ஒரே நாளில் சிந்திக்கவுமில்லை, எந்த வாய்வழி பின்னணியுமின்றி தேவன் இந்த கதைகளை ஒரு நாளில் மோசேயிடம் சொல்லவுமில்லை என்பதை உணர உதவும் சில விஷயங்களை நாம் அறிவோம். இதற்கு ஒரு சான்றை கூறலாம். பண்டைய கலாச்சாரங்களில் கதைகள் சொல்வதன் மூலமே அவர்கள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு செய்திகளை கடத்துகிறார்கள். சில



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நேரங்களில் தங்கள் நாட்களில் வாழ்ந்த முக்கிய கதாநாயகர்களைப் பற்றி மீண்டும் மீண்டும் கதை வடிவில் மற்றவர்களுக்கு சொல்கிறார்கள். இதே காரியம் தான் வேதாகம நாட்களிலும் நடந்தது. மேலும், நமக்கு உறுதியான சான்று வேதத்தில் இருக்கிறது. அதாவது, யாத்திராகமம் மற்றும் எண்ணாகமம் புத்தகத்தில் காணப்படும் கதைகள் உபாகமம் புத்தகத்தில் அடிக்கடி மீண்டும் மீண்டும் வருகின்றன. மேலும் உபாகமம் புத்தகத்தில், மோசே உரை நிகழ்த்திய போது அல்லது உபதேசம் செய்யும் போது, யாத்திராகமம் மற்றும் எண்ணாகமம் புத்தகங்களில் நாம் காணும் கூறுகளை உள்ளடக்கிய உரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகளைப் பற்றிய சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், அவைகள் ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால் அவை ஒன்று இல்லை. எனவே, மோசேயின் காலத்தில் ஒரு கலாச்சாரம் இருந்தது, அந்த நாட்களில் இஸ்ரவேலில் ஒரு கலாச்சாரம் இருந்தது, கடந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை கதையாக ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு சொல்லும் வழக்கம் இருந்தது, பிறகு நீங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட வழிகளில் அவைகளை உபயோகிக்கலாம். நிச்சயமாக, மோசே தனது வாழ்க்கையின் ஆரம்ப ஆண்டுகளில் தனது தாயின் வீட்டில் வளர்ந்தார் என்பது உங்களுக்குத் தெரியும், நிச்சயமாக இது அவருடைய முன்னோர்களைப் பற்றி அறிய ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கும், மேலும் அவன் ஒரு எபிரெயன் என்ற அடையாளத்தைப் பற்றி அறியவும்,தான் ஆபிரகாமில் இருந்து வந்தவன் என்பதை அறியவும் முடிந்தது. மோசே ஜெத்ரோவிடமிருந்து திரும்பிய பின்னரும் கூட, மூப்பர்களுடன் உரையாடியபோது அவர் தனது மூதாதையரைக் குறித்த தனித்துவமான கதைகளை நிச்சயமாக கற்றுக் கொண்டிருப்பார். வாய்வழி மரபுகள் வழியாகவோ அல்லது தலைமுறை தலைமுறையாக சொல்லப்பட்ட கதைகள் மூலமாகவோ பல காரியங்களை மோசே அறிந்து பஞ்சாகமத்தில் உள்ள பல காரியங்களை எழுதினார் என்று நினைக்க நல்ல காரணம் இருக்கிறது.

– Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எரியும் முட்புதரில் மோசேயை தேவன் அழைத்ததன் குறிப்பிடத்தக்க அம்சத்தை வாய்மொழி மரபுகளின் முக்கியத்துவம் விளக்குகிறது. யாத்திராகமம் 3:13,16 இல் என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள்:

> அப்பொழுது மோசே தேவனை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்? என்றான் … "ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய 'தேவனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனமானார் என்று அவர்களிடம் சொல்'" (யாத்திராகமம் 3:13,16).

தம்மை "கர்த்தர்" அல்லது ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனாகிய *யேகோவா* என்று குறிப்பிடும்படி தேவன் மோசேயிடம் கூறினார். *யேகோவா* என்ற தெய்வீகப் பெயர் மற்றும் முற்பிதாக்களின் மரபுகளைப் பற்றி யாரோ மோசேக்குக் கற்பித்திருக்க வேண்டும். இல்லையெனில், தேவனின் அறிக்கை மோசேயின் மனதில் எண்ணற்ற கேள்விகளை எழுப்பியிருக்கும். ஆனால், நாம் இங்கே பார்ப்பது போல், மோசே தேவனின் கட்டளையைப் பெற மிகவும் தயாராக இருந்தார், அவர் அதைப் பற்றி எந்தக் கேள்வியையும் எழுப்பவில்லை.

மோசே பஞ்சாகமத்தை இயற்றிய போது அவருடைய ஆதாரங்களும் சுயாதீனமான ஆவணங்களை உள்ளடக்கியது என்று நாம் இன்னும் நம்பிக்கையுடன் இருக்க முடியும். யாத்திராகமம் 24:7 போன்ற இடங்களில் இதை நாம் பார்க்கிறோம். மோசே "உடன்படிக்கையின் புத்தகத்தை" ஒரு சுயாதீன ஆவணமாக எழுதினார், பின்னர் அவர் யாத்திராகமம் புத்தகத்தில் சேர்த்தார் என்று இந்த வசனம் கூறுகிறது. மேலும் எண்ணாகமம் 21:14-15 இல், மோசே "கர்த்தருடைய யுத்த புஸ்தகம்" என்று அழைக்கப்படும் ஒரு புத்தகத்திலிருந்து புவியியல் குறிப்புகளை மேற்கோள் காட்டினார்.

இதைத் தவிர, ஆதியாகமம் 5:1 இல், "ஆதாமின் வம்சவரலாறின் புத்தகம்" என்று அழைக்கப்படும் வெளிப்புற இலக்கிய ஆதாரத்தைப் பற்றிய வெளிப்படையான குறிப்பை நாம் வாசிக்கிறோம். இந்த நேரடி மொழிபெயர்ப்பு குறிப்பிடுவது போல, மோசே ஒருவேளை ஒரு உண்மையான "புத்தகம்" அல்லது "சுருளில்" இருந்து ஆதாமின் சந்ததியினரைப் பற்றிய தகவலைப் பெற்றிருக்கலாம். எபிரெய மொழியில் சுருள் என்கிற வார்த்தைக்கு סֵפֶר (*செபேர்*) என்கிற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

மேலும், யாத்திராகமம் 17:14 யுத்தத்தின் பதிவைக் குறிக்கிறது. இந்த வசனத்தில், தேவன் மோசேக்கு இவ்வாறு கட்டளையிட்டார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் (யாத்திராகமம் 17:14).

மோசேக்கு தேவன் கொடுத்த கட்டளை மோசே முழுக்க முழுக்க பஞ்சாகமத்தை எழுதுவதற்கு முன்பு சில நிகழ்வுகளையாவது சுயாதீனமாக பதிவு செய்தார் என்பதைக் குறிக்கிறது.

> நீங்கள் பஞ்சாகமத்தைப் பார்க்கும்போது, குறிப்பாக ஆதியாகமம் புத்தகத்தின் விஷயத்தில், மோசே உண்மையில் மிகவும் பழமையான ஆவணங்களை இணைத்துக்கொண்டதாக தோன்றுகிறது. மோசே உண்மையில் நான்கு மொழிகளை அறிந்திருப்பார் என்பது நமக்குத் தெரியும். மோசேக்கு எகிப்திய பாஷை தெரிந்திருந்தது. அவர் ஒரு எபிரெய குடும்பத்தில் வளர்ந்ததால் அவருக்கு எபிரெய மொழியும் தெரியும்; அவரது தாயார் அவரது சொந்த வளர்ப்புத் தாய். அன்றைய பொது மொழியான அக்காடியன் என்ற சர்வதேச வர்த்தகம் மற்றும் ராஜாங்க மொழியை அவர் அறிந்திருப்பார் என்பதையும் நாம் அறிவோம். மேலும் அவர் அராமிய பாஷையை அறிந்திருப்பார், ஏனென்றால் அராமியம் என்பது இஸ்ரவேலர்கள் தங்கள் ஆரம்ப காலத்தில் பேசிய மொழியாகும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பலர் இந்த பாஷையை பேசினர். எனவே, மோசே மிகவும் நன்கு பயிற்சி பெற்றவர், நன்கு படித்தவர், அவர் ஆதியாகமம் புத்தகத்தை கட்டமைத்த விதத்தில் இருந்து அவர் சில ஆவணங்களைப் பயன்படுத்துகிறார் என்று நமக்குச் சொல்கிறார், ஏனெனில் அவர் பத்து முறை நம்மிடம் “இவை வம்சவரலாறு … ” என்று கூறுகிறார். அராமியம் அல்லது கானானிய மூல மொழியிலிருந்து இப்படி அவர் பாதுகாத்து வைத்திருந்த விவரங்களை தான் ஆதியாகமம் எழுதிக்கொண்டிருந்த எபிரெய மக்களுக்காக மொழிபெயர்த்திருப்பதாகத் தெரிகிறது. ஆதியாகமத்திற்குப் பிறகு இது தொடர வேண்டிய அவசியம் இருந்திருக்காது. நீங்கள் லேவியராகமம் மற்றும் எண்ணாகமம், யாத்திராகமம் மற்றும் உபாகமம் போன்ற புத்தகங்களுக்கு வரும்போது, மோசே நடந்த நிகழ்வுகளை உடனேயே எழுதுவதை நாம் அறிய முடியும். அவர் நிகழ்வுகள் நடப்பதைப பார்த்தவராய் அவைகளை பதிவு செய்கிறார். மேலும் முக்கியமாக, தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தான் அதை நடக்கச் செய்கிறார், ஏனென்றால் அந்தப் புத்தகங்களின் பெரும்பகுதி அவருடைய தீர்க்கதரிசி மூலம் அவர் பேசிய வார்த்தைகள்.
>
> – Dr. டக்லஸ் ஸ்டுவர்ட்

பஞ்சாகமமானது வாய்வழி மற்றும் இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு எழுதப்பட்டது என்பதை ஒப்புக்கொள்வதோடு மட்டுமல்லாமல், சுவிசேஷ மார்க்கத்தார்கள் மோசேயின் படைப்புரிமையைப் பற்றி பேசும்போது, பஞ்சாகமம் உண்மையில் ஒரு சிக்கலான செயல்முறையின் மூலம் எழுதப்பட்டது என்பதையும் ஒப்புக்கொள்கிறார்கள்.

**செயல்முறை.** பஞ்சாகமம் எழுதப்படுவதற்கு முன்பே வாய்மொழி மூலம் அதிலுள்ள பெரும்பகுதியை மக்களுக்கு மோசே வழங்கினார். யாத்திராகமம் மற்றும் உபாகமம் புத்தகங்களில் காணப்படும் அவரது உரைகள் அதற்கான தெளிவான உதாரணங்களை நமக்கு வழங்குகின்றன. மேலும் பஞ்சாகமத்தின் மற்ற பகுதிகளும் முதலில் இஸ்ரவேலுக்கு வாய்மொழியாக வழங்கப்பட்டு பின்னர் எழுதப்பட்டிருக்கலாம்.

பஞ்சாகமத்தை தொகுக்க மோசே பிரதிகளை உருவாக்குபவர்கள், செயலாளர்கள் அல்லது எழுத்தாளர்களை பயன்படுத்தியிருக்கலாம். மோசே எகிப்தின் கல்வி மன்றங்களில் கல்வி கற்றார் என்பது நமக்குத் தெரியும். எனவே, அதிகாரப்பூர்வ ஆவணங்களை எழுதுவதற்கு எழுத்தர்கள் மற்றும் செயலாளர்களைப் பயன்படுத்தும் நன்கு நிறுவப்பட்ட நடைமுறையை அவர் நன்கு அறிந்திருப்பார். இஸ்ரவேலின் தலைவராக, மோசே தனது மேற்பார்வையின் கீழ் பஞ்சாகமம் முழுவதையும் எழுத உபயோகிக்காவிட்டாலும், பெரும் பகுதிகளை எழுத உதவியாளர்களை நியமித்தார்.

மற்ற வேத எழுத்தாளர்களும் செயலாளர்களை வேலைக்கு அமர்த்தியதாக வேதம் தெளிவாக கூறுகிறது. உதாரணமாக, எரேமியா 36: 4 இல், தீர்க்கதரிசி எரேமியா தனது வார்த்தைகளை எழுதும்படி தனது சீஷர் பாருக்கிற்கு வெளிப்படையாக அறிவுறுத்தினார்.

இந்த நடைமுறையின் சான்றுகளை முதன்மையாக பஞ்சாகமத்தின் சீரற்ற இலக்கிய பாணிகளில் நாம் காணலாம். உதாரணமாக, ஆதியாகமத்தின் பல்வேறு பகுதிகளில் தோன்றும் கதைசொல்லும் பாணிகள் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டவை. மேலும் உபாகமத்தில் வரும் சூத்திர மற்றும் திரும்பத் திரும்ப வரும் எபிரெய மொழிக்கும் பஞ்சாகமத்தின் மற்ற எல்லா புத்தகங்களில் வரும் எபிரெய மொழிக்குமிடையே வேறுபாடுகளை நாம் காண்கிறோம். பெரும்பாலும் இது போன்ற வேறுபாடுகள் வெவ்வேறு எழுத்தர்களின் வேலையைப் பிரதிபலிக்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசேயின் படைப்புரிமையானது மோசே பயன்படுத்திய ஆதாரங்கள் மற்றும் செயல்முறைக்கு மட்டுமல்லாமல், மோசேயின் காலத்திற்குப் பிறகு பஞ்சாகமத்தை புதுப்பிப்பதற்கும் பொருந்தும்.

**புதுப்பித்தல்.** நாம் பார்த்தபடி, இஸ்ரவேல் சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு, முழு பஞ்சாகமமும் அதன் இறுதி வடிவத்தை எட்டியதாக முக்கியமான வியாக்கியான அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் சுவிசேஷ மார்க்கத்தார்கள் பஞ்சாகமம் மோசேயின் நாட்களில் தோன்றியதாகக் கூறியுள்ளனர். மோசேயின் நாட்களுக்குப் பிறகும் கூட லேசான தலையங்கப் புதுப்பித்தல்கள் நடந்ததற்கு பஞ்சாகமத்தில் சில பகுதிகள் சான்றளிக்கின்றன.

பஞ்சாகமத்தின் குறிப்பிட்ட கூறுகளை நாம் தேதியிடும்போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உதாரணமாக, சில வியாக்கியான அறிஞர்கள் ”பெலிஸ்தர்களை” குறிப்பிடும் ஒவ்வொரு பகுதியும் மோசேயின் நாட்களுக்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். ஆனால் இந்த கண்ணோட்டம் குறைந்தது மூன்று காரணங்களுக்காக நம்பும்படியாக இல்லை. முதலாவதாக, இப்பகுதியில் பெலிஸ்தர்கள் இருப்பதற்கான தொல்பொருள் தரவு சர்ச்சைக்குரியது. இரண்டாவதாக, மோசே ”பெலிஸ்தன்” (அதாவது ”பயணி” என்று பொருள்) என்ற வார்த்தையை ஒரு சமூகவியல் பெயராகப் பயன்படுத்தியிருக்கலாம். மூன்றாவதாக, மோசேயின் நாளில் ”பெலிஸ்தன்” என்ற சொல் தெரியாவிட்டாலும், ”பெலிஸ்தன்” என்ற வார்த்தையின் பயன்பாடு மோசேயின் நாட்களுக்குப் பிறகு பார்வையாளர்களுக்கு உதவுவதற்காக சிறிதாக புதுப்பிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதேபோல், ஆதியாகமம் 36:31-43 இல் உள்ள ஏதோமிய ஆட்சியாளர்களின் பட்டியல் மோசேயின் வாழ்நாளைத் தாண்டி செல்கிறது என்று வியாக்கியான அறிஞர்கள் வாதிட்டனர். ஆனால் ஆதியாகமத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஏதோமின் ஆட்சியாளர்களின் அடையாளங்கள் உறுதியாக இல்லை. மேலும், இந்தப் பகுதிகள் மோசேயின் காலத்திற்குப் பிறகு சேர்க்கப்பட்ட பட்டியல்களின் சிறிய நீட்டிப்புகளைக் கொண்டிருக்கலாம்.

பஞ்சாகமத்தில் சிறிய புதுப்பிப்புக்கான ஒரு தெளிவான உதாரணம் ஆதியாகமம் 14:14 இல் இருக்கிறது. இங்கே நாம் வாசிக்கிறோம்:

> தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, தாண் என்னும் ஊர் மட்டும் அவர்களைத் தொடர்ந்தான் (ஆதியாகமம் 14:14).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த பகுதி ஆபிரகாம் தனது எதிரிகளை ”தாண் வரை” பின்தொடர்ந்ததாக கூறுகிறது. ஆனால் இந்த வடக்கு பகுதி யோசுவாவின் நாட்கள் வரை தாண் என்று பெயரிடப்படவில்லை என்று யோசுவா 19:47 இல் நாம் கற்றுக்கொள்கிறோம், . எனவே, ஆதியாகமம் 14:14 புதுப்பிக்கப்பட்ட இடப்பெயரை பிரதிபலிக்கிறது என்று வேதம் குறிப்பிடுகிறது. இந்த வகை நவீனமயமாக்கல் பிற்கால வாசகர்களுக்கு ஆபிரகாமின் கதையை தங்களுக்குத் தெரிந்த புவியியலுடன் தொடர்புபடுத்த உதவியிருக்கும். மேலும் பஞ்சாகமத்தில் உள்ள பல பகுதிகள் இதே வழியில் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம்.

பஞ்சாகமத்தில் காணப்படும் மிகவும் பிரபலமான மற்றும் குறிப்பிடத்தக்க புதுப்பிப்பு உபாகமம் 34 இல் மோசேயின் மரணத்தின் பதிவு ஆகும். ஆனால் இங்கேயும் கூட, இஸ்ரவேலின் சட்டமியற்றுபவருக்கு என்ன நடந்தது என்பதை விளக்கும் ஒரு பின்னிணைப்பை விட கொஞ்சம் அதிகமான தகவலே நம்மிடம் உள்ளது.

இது போன்ற சிறிய புதுப்பிப்புகளுக்கு மேலதிகமாக, எபிரெய மொழி வளர்ந்தவுடன் பஞ்சாகமத்தின் மொழியும் புதுப்பிக்கப்பட்டது. ”பழங்கால எபிரேயம்” என்று அறிஞர்களால் அழைக்கடுகிற ஒரு மொழியில் மோசே எழுதியதாக சமீபத்திய சான்றுகள் உறுதியாகக் கூறுகிறது. ”அமர்னா கடிதங்கள்” என்று அழைக்கப்படும் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட சர்வதேச ஆவணங்களிலிருந்து வரும் சான்றுகள், எபிரெய மொழியின் இந்த வடிவம் மோசேயின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட கானானிய பேச்சுவழக்குகளுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதைக் குறிக்கிறது. ஆனால் இந்த மொழி பஞ்சாகமத்தின் பாரம்பரிய எபிரெய உரையில் நாம் கண்டதை விட முன்னதாகவே இருந்தது.

> பழைய ஏற்பாட்டின் மொழியைப் பற்றிய கேள்வி ஒரு கவர்ச்சிகரமான ஒன்றாகும். இந்த மொழி எப்போது வந்தது … எங்கிருந்து வந்தது? அது எங்கு வெளிப்பட்டது? இது நீண்ட காலமாக மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியது, ஏனென்றால் தொல்பொருளியலில் இருந்து ஆதாரங்களைப் பார்க்கும்போது எபிரெய எழுத்து, பண்டைய எபிரெய மொழி கூட இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. மேலும் கடந்த இருபதாம் நூற்றாண்டில் தோண்டப்பட்ட பிரதிகள் நம்மிடம் உள்ளன. மேலும், அவைகள் அனைத்தும் தாமதமாக வருகின்றன. அவைகள் மோசேயின் காலத்தை விட தாமதமாக வருகின்றன … அதனால் நீங்கள் என்ன செய்வீர்கள்? கி.மு. பதிமூன்று மற்றும் பதினான்காம் நூற்றாண்டின் போது கிடைத்த ஆதாரம் நம்மிடம் உள்ளது. ஒரு முழு ராஜதந்திர கடித தொடர்பு இருந்தது, ஒரு காப்பகம் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது, இஸ்ரவேல் நிலமான கானானில் அல்ல. அது பிற்காலத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இஸ்ரவேலின் நிலமாக மாறும். ஆனால் எகிப்தில் இது நடந்தது... மேலும் அவர்கள் மெசொப்பொத்தாமியாவிலிருந்து உருவான ஒரு மொழியான அக்காடியனில் எழுதுகிறார்கள். அது அக்கால சர்வதேச மொழியாகும். ஆனால் அவர்கள் கானானியர்கள், உள்ளூர் காரர்களான அவர்கள் எகிப்தில் தங்கள் ஆட்சியாளர்களுக்கு எழுதுகிறார்கள், அவர்களிடம் சிறிய விளிம்பு குறிப்புகள் உள்ளன, இது கானானிய மொழியில் எழுதப்பட்டுள்ளது. அதுவே நம் இணைப்பாகும். கானானிய மொழிதான் மோசேயின் காலத்தின் எபிரெய மொழியுடன் நம்மை இணைக்கிறது. நிச்சயமாக, நம்மிடம் எந்த பதிவும் இல்லை, மோசேயின் சகாப்தத்தின் எபிரெய மொழியில் நம்மிடம் எதுவும் இல்லை, ஆனால் அது நம் இணைப்பு, அது நம் பாலம். எனவே, இது கானானிய விளிம்பு குறிப்புகள் தொடங்கி மோசேயின் காலத்தின் எபிரேயம் வரையும், பின்னர் இது இன்றைய வேதாகம எபிரேயம் வரையும் செல்கிறது, இந்த மொழியில் தான் பெரும்பாலான சிறையிருப்பிற்கு முந்தைய வேத புத்தகங்கள் எழுதப்பட்டன. ஆகையால் அது நம் இணைப்பாகும். இது ஒரு மறைமுகமானது, ஆனால் அது உண்மையான ஒன்று, அது உறுதியான ஒன்று.
>
> – Dr. டாம் பெட்டர்

இஸ்ரவேல் மக்களை ராஜாக்கள் ஆண்ட காலத்தில், கி. மு. 1000 க்கும் கி. மு. 600 க்கும் இடையில், ”பழைய” அல்லது “பண்டைய எபிரெய மொழி” என்று இன்று அழைக்கப்படுகிற மொழியாக வளர்ச்சியடைந்தது. யாத்திராகமம் 15 மற்றும் உபாகமம் 32 இன் பகுதிகள் போன்ற எபிரெய மொழியின் இந்த கட்டத்தை பஞ்சாகமங்களின் பகுதிகள் ஒத்திருப்பதை பல அறிஞர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

ஆனால் மோசேயின் ஆகமங்களின் பெரும்பகுதி “செம்மொழி எபிரேயம்” நாம் இப்போது அழைக்கும் மொழியினுடைய சொற்களஞ்சியம், எழுத்துக்களை எழுதும் மற்றும் உச்சரிக்கும் முறை, மற்றும் இலக்கணத்தை மிக நெருக்கமாக ஒத்திருக்கிறது, இது எட்டாம் நூற்றாண்டின் நடுவிலிருந்து ஆறாம் நூற்றாண்டுகளின் முற்பகுதிக்கு இடையே பயன்பாட்டில் இருக்கும்போது எபிரெய மொழியினுடைய வளர்ச்சியின் ஒரு கட்டம்.

இந்த சான்றுகளிலிருந்து, மோசே பயன்படுத்திய தொல்-எபிரெய மொழியானது பண்டைய எபிரெய மொழிக்கு புதுப்பிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. பின்னர் அது இப்போது எபிரெய வேதாகமத்தில் உள்ளது போல் செம்மொழி எபிரெயமாக நவீனமயமாக்கப்பட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் நாட்களில், மோசேயின் ஆகமங்களின் எபிரெய மொழி ஏற்கனவே இந்த வகையான மாற்றங்களைச் சந்தித்திருந்தது என்பதை எப்போதும் நினைவில் கொள்வது அவசியம். ஆனால் இந்த உண்மையானது இயேசுவையோ அல்லது அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளையோ அவர்கள் வாழ்ந்த காலத்தில் மோசேயின் ஆகமங்களை மோசே தாமே எழுதியதை உண்மையாக பிரதிநிதித்துவப்படுத்துவதை தடுக்கவில்லை. எனவே, இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, மோசேயின் ஆகமங்கள், இப்போது நாம் வைத்திருக்கிறபடி, மோசேயின் உண்மையான எழுத்துக்களை உண்மையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று நாம் உறுதியாக நம்பலாம்.

இதுவரை, நாம் நவீன சுவிஷேசக கண்ணோட்டத்தைக் கொண்டுவரும் சில முக்கியமான முன்கணிப்புகளைப் பார்த்துள்ளோம். வேதாகமத்தினுடைய இந்த பகுதியின் நூலாசிரியரை சுவிசேஷகர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொண்டோம். இப்போது, இந்த கண்ணோட்டங்கள் சுவிசேஷகர்கள் பின்பற்றும் வியாக்கியான உத்திகளை பாதித்த சில வழிகளைப் பார்க்கலாம்.

# வியாக்கியான உத்திகள்

இந்த வியாக்கியான உத்திகளை விவரிக்க பல வழிகள் உள்ளன, ஆனால் சுவிசேஷகர்கள் பின்பற்றும் மூன்று முக்கிய வழிகளைப் பற்றிப் பேசுவோம். முதலில் நாம் கருப்பொருள் வியாக்கியானம் பற்றிப் பார்ப்போம். பின்னர் நாம் வரலாற்று வியாக்கியானத்தை ஆராய்வோம். இறுதியாக, நாம் இலக்கிய வியாக்கியானத்தை ஆராய்வோம். இந்த மூன்று உத்திகள் மிகவும் ஒன்றையொன்று சார்ந்தவை மற்றும் ஒன்றையொன்று பிரிந்து செயல்படுவதில்லை. ஆனால் அவை வெவ்வேறு அழுத்தங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, எனவே கருப்பொருள் வியாக்கியானத்துடன் தொடங்கி அவற்றை தனித்தனியாகப் பார்க்க இது உதவும்.

## கருப்பொருள் சார் வியாக்கியானம்

கருப்பொருள் வியாக்கியானத்தில், நமக்கு முக்கியமான பிரச்சனைகளை பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியைப் போல நாம் பஞ்சாகமங்களை வைத்திருக்கிறோம். வேதாகமத்தினுடைய இந்தப் பகுதியில் சில தலைப்புகள் அல்லது கருப்பொருள்களை சுவிஷேச மார்க்கத்தார்கள் முறையாக வலியுறுத்தியுள்ளனர். ஆனால் நாம் பார்க்க இருப்பது போல், மோசேயின் ஆகமங்களில் உள்ள ஒவ்வொரு புத்தகத்திற்கும் அதற்குரிய முன்னுரிமைகள் உள்ளன. எனவே, மோசே தாமே இந்த கருப்பொருள்களை வலியுறுத்தலாம் அல்லது வலியுறுத்தாமல் இருக்கலாம். இந்த

அணுகுமுறையானது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கிறிஸ்தவ வியாக்கியானத்தை வகைப்படுத்தியுள்ளது.

கிறிஸ்தவர்கள் வலியுறுத்திய கருப்பொருள்களின் பட்டியல் மிக நீளமானது. சிலர் தனிப்பட்ட கேள்விகளையும் தற்போதைய சர்ச்சைகளையும் வலியுறுத்தியுள்ளனர். மற்றவர்கள் பாரம்பரிய முறையான இறையியலில் தங்கள் கருத்துகளுக்கு ஆதரவாக மோசேயின் ஆகமங்களைப் பயன்படுத்தியுள்ளனர். உதாரணமாக, பஞ்சாகமங்கள் தேவனைப் பற்றிய பல விஷயங்களை வெளிப்படுத்துகின்றன. இது மனிதகுலத்தின் பல்வேறு அம்சங்களின் மீது அதிக நேரத்தை செலவிடுகிறது மேலும் இது பொதுவாக சிருஷ்டிப்பின் மற்ற காரியங்கள் மீது அதிக கவனம் செலுத்துகிறது.

இப்போது, கருப்பொருள் வியாக்கியானத்தின் மிகப்பெரிய குறைபாடுகளில் ஒன்று, மோசேயின் உண்மையான கருப்பொருள்கள் வாக்குத்தத்த நிலத்தை நோக்கி அவரைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்களுக்கானது என்ற உண்மையை அது அடிக்கடி குறைத்துவிடுகிறது என்பதாகும். இந்த அடிப்படை சூழலுக்கு சிறிதளவு கவனமே செலுத்தப்படுவதால், கருப்பொருள் வியாக்கியானங்கள் பெரும்பாலும் சிறிய கருப்பொருள்களுக்கு கவனத்தை ஈர்ப்பதை விட அதிகமாகவே செய்கின்றன.

இருப்பினும், புதிய ஏற்பாடு மோசேயின் ஆகமங்களுக்கான அணுகுமுறையை உறுதிப்படுத்துகிறது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இயேசு மற்றும் புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள், விசுவாசனத்தினால் நீதிமானாக்கப்படுதல், விவாகரத்து, விசுவாசம் மற்றும் கிரியைகள், மற்றும் வேதாகமத்தின் இந்த பகுதியில் ஒப்பீட்டளவில் சிறிய கருப்பொருள்களின் நியாயப்படுத்தல் போன்ற கருப்பொருள்களைக் கையாளும் போது மோசேயின் புத்தகங்களை நோக்கினார்கள். எனவே, இந்த வேதாகமத்தின் கருப்பொருள்களைப் படிக்காதபடி நாம் கவனமாக இருக்கும் வரை, கருப்பொருள் வியாக்கியானம் மோசேயின் ஆகமத்திற்கு ஒரு மதிப்புமிக்க அணுகுமுறையாக இருக்கலாம்.

கருப்பொருள் வியாக்கியானத்தின் வியாக்கியான உத்திக்கு கூடுதலாக, வரலாற்று வியாக்கியானம் என்று நாம் அழைக்கக்கூடிய உத்தியைக் கொண்டு சுவிசேஷகர்கள் மோசேயின் ஆகமங்களை ஆராய்வதும் பொதுவானது.

## வரலாற்று வியாக்கியானம்

சுவிசேஷ மார்க்கத்தார்கள் மோசேயின் ஆகமங்களின் இறையியல் கருப்பொருள்கள் உண்மையானது என்று மட்டும் நம்பவில்லை. ஆனால், இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் உதாரணங்களைப் பின்பற்றி, மோசேயின் ஆகமங்களின் வரலாறு பற்றிய பதிவுகளும் உண்மையானது என்றும் நம்புகிறோம். இந்த காரணத்திற்காக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷகர்கள் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதைக் கண்டறியும் வழிமுறையாக பஞ்சாகமங்களை அடிக்கடி விளக்கியுள்ளனர்.

கருப்பொருள் வியாக்கியான உத்திகளானது மோசேயின் ஆகமங்களை நமக்கு ஆர்வமூட்டும் கருப்பொருள்களைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியைப் போல கையாளுவதாகக் குறிப்பிட்டுள்ளோம். ஆனால், வரலாற்று பகுப்பாய்வு மோசேயின் ஆகமங்களை வரலாற்றைப் பார்ப்பதற்குரிய ஜன்னல் போல் கருதுகிறது. மோசேயின் புத்தகங்கள் வழியாக, அவற்றின் பின்னால் இருக்கும் வரலாற்றை ஆராய்வோம்.

ஆதியாகமமானது சிருஷ்டிப்பு முதல் யோசேப்பின் நாட்கள் வரையான வரலாற்றைக் காட்டுகிறது. யோசேப்பின் மரணத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையின் அடிவாரத்தில் மோசேயுடன் முகாமிட்ட காலம் வரை யாத்திராகமத்தின் முக்கிய கதைக்களம் நீண்டுள்ளது. சீனாய் மலையில் மோசே பெற்ற சில பிரமாணங்கள் மற்றும் சடங்குகளை லேவியராகமம் விரிவாக விவரிக்கிறது. எண்ணாகமம் சீனாய் மலையிலிருந்து மோவாப் சமவெளி வரை முதல் மற்றும் இரண்டாம் தலைமுறைகளின் பிரயாண அணிவகுப்பைக் காட்டுகிறது. மேலும் கானானுக்குள் நுழையவிருந்த இஸ்ரவேல் மக்களுடன் மோவாப் சமவெளிகளில் மோசே பேசிய உரைகளை உபாகமம் விரிவாக விவரிக்கிறது. வரலாற்று வியாக்கியானத்தில், சுவிசேஷகர்கள் இந்த வெளிப்படையான வரலாற்று நோக்குநிலையைப் பயன்படுத்திக் கொண்டனர்.

வரலாற்று வியாக்கியானம் எவ்வளவு மதிப்பீடுடையதாக இருந்தாலும், மோசேயின் ஆகமங்கள் மீதான இந்த அணுகுமுறை அதன் வரம்புகளையும் கொண்டுள்ளது. கருப்பொருள் பகுப்பாய்வைப் போலவே, வரலாற்று வியாக்கியானமும் மோசே மற்றும் அவரது உண்மையான பார்வையாளர்களுக்கு ஒப்பீட்டளவில் குறைந்த கவனத்தை அளிக்கிறது. அதற்குப் பதிலாக, மோசேயின் ஆகமங்களினுடைய புத்தகங்கள் எழுதப்படுவதற்கு முன்பு தேவன் பல்வேறு காலகட்டங்களில் என்ன செய்தார் என்பதை நோக்குநிலையாகக் கொண்டது. ஆதாம் மற்றும் ஏவாளுடன் தேவன் என்ன செய்தார்? நோவாவின் வெள்ளத்தின் முக்கியத்துவம் என்ன? ஆபிரகாம் தேவனுடன் எவ்வாறு தொடர்பு கொண்டார்? இஸ்ரவேல் மக்கள் கடலைக் கடந்தபோது தேவன் அதன் மூலம் என்ன செய்தார்? இவை முறையான நோக்கங்கள், ஆனால் அவை ஆசிரியராக மோசேயின் முக்கியத்துவத்தையும் உண்மையான பார்வையாளர்களாக இஸ்ரவேல் மக்களின் முக்கியத்துவத்தை குறைக்கின்றன.

தெளிவாக, சுவிசேஷ மார்க்கத்தார்கள் மோசேயின் ஆகமங்கள் பற்றிய வரலாற்று வியாக்கியானம் மற்றும் கருப்பொருள் வியாக்கியானத்திலிருந்து பல வழிகளில் பயனடைந்துள்ளனர். ஆனால் சமீபத்திய பத்தாண்டுகளில், மூன்றாவது நோக்குநிலையானது முன்னிலையடைந்துள்ளது, இதை நாம் இலக்கிய வியாக்கியானம் என்று அழைக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## இலக்கிய வியாக்கியானம்

நாம் பார்த்தது போல், கருப்பொருள் பகுப்பாய்வு பஞ்சாகமங்களை முக்கியமான கருப்பொருள்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகக் கருதுகிறது. பஞ்சாகமங்கள் எழுதப்படுவதற்கு முன் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளைக் காண உதவும் ஒரு ஜன்னலாக பஞ்சாகமங்களை வரலாற்று பகுப்பாய்வு கருதுகிறது. இதற்கு நேர்மாறாக, இலக்கிய பகுப்பாய்வு மோசேயின் ஆகமங்களை ஒரு ஓவியமாகக் கருதுகிறது, மேலும் அதன் உண்மையான பார்வையாளர்களை குறிப்பிட்ட வழிகளில் பாதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு இலக்கிய கலைப் படைப்பாகவும் இருக்கிறது. அடிப்படையில், இலக்கிய வியாக்கியானம் கேட்பது இதுதான்: மோசே பஞ்சாகமங்களை எழுதியபோது தனது இஸ்ரவேலர்களாகிய பார்வையாளர்களின் மேல் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்த விரும்பினார்?

மோசேக்கு பல நோக்கங்கள் இருந்தன என்று சொல்வது நியாயமானது. ஆனால் இந்த நோக்கங்களை பொதுவான சொற்களில் விவரிக்க இது உதவுகிறது. எனவே, மோசேயின் இலக்கை இந்த வழியில் விவரிப்போம்: இஸ்ரவேல் மக்களினுடைய தேவனால் நியமிக்கப்பட்ட தலைவராக,

> வாக்குத்தத்த நிலத்தின் வெற்றி மற்றும் குடியேற்றத்தில் தேவனுக்கு விசுவாசமுள்ள சேவைசெய்ய இஸ்ரவேல் மக்களை தயார் செய்ய மோசே பஞ்சாகமங்களை எழுதினார்.

சுருக்கத்தில் உள்ள கருப்பொருள்களின் வகைப்படுத்தலைப் பார்ப்பதற்குப் பதிலாக, அல்லது வெறும் வரலாற்று நலன்களைக் கொண்ட நிகழ்வுகளைக் கையாள்வதற்குப் பதிலாக, ஒரு வழியில் அல்லது இன்னொரு வழியில், ஒவ்வொரு கருப்பொருளும், வரலாற்றுப் பதிவும் இந்த இலக்கை அடைய வடிவமைக்கப்பட்டுள்ளது.

மோசே பஞ்சாகமங்களை தொகுத்தபோது இரண்டு காலகட்டங்களுக்கு இடையில் நின்றார் என்பதை இலக்கிய வியாக்கியானம் ஒப்புக்கொள்கிறது. ஒரு பக்கம், ”அந்த உலக” நிகழ்வுகள் என்று நாம் அழைக்கும் கடந்த கால சம்பவங்களை அவர் எழுதினார். ஆதியாகமம் புத்தகத்தில் காணப்படும் நிகழ்வுகள் மோசேயின் நாட்களுக்கு வெகு காலத்திற்கு முன்பே நிகழ்ந்தன. எகிப்திலிருந்து வெளியேறும் முதல் தலைமுறை காலத்தில் நடந்த நிகழ்வுகள் மீது யாத்திராகமம் மற்றும் லேவியராகமம் கவனம் செலுத்துகின்றன. எண்ணாகமம் மற்றும் உபாகமம் ஆகியவை முதல் தலைமுறையின் காலம் முதல் இரண்டாம் தலைமுறை வரையிலான நிகழ்வுகளை உள்ளடக்கியது. பஞ்சாகமங்களின் ஒவ்வொரு புத்தகத்தையும் மோசே எழுதியபோது, அவர் ஆதிமுதலான இந்த வெவ்வேறு காலங்களை மனதில் வைத்திருந்தார்.

மறு புறம், அவருடைய நாட்களில் வாழ்ந்த மக்களுக்காக ”அவர்களின் உலகத்திற்கான” காரியங்களை எழுதினார். ”அவர்களுக்கான உலகத்தில்”

தேவனை சேவிப்பதற்கு எப்படி சிந்திக்க வேண்டும், செயல்பட வேண்டும் மற்றும் உணர வேண்டும் என்று தனது ஜனங்களுக்கு கற்பிக்க ”அந்த உலகின்” கடந்த காலத்திலிருந்து மோசே எடுத்துக்கூறினார். இந்த இலக்கை நிறைவேற்ற, மோசே ”அந்த உலகம்” பற்றி ”அவர்களின் உலகத்துடன்” இணைக்கும் விதத்தில் எழுதினார்.

மோசே தனது உண்மையான பார்வையாளர்களுடன் கடந்த காலத்தை மூன்று முக்கிய வழிகளில் இணைத்தார். அவர் தனது பார்வையாளர்களின் தற்போதைய அனுபவங்களின் பின்னணி அல்லது தோற்றத்தை ஏற்படுத்த கடந்த கால கணக்குகளை அவர்களுக்குக் கொடுத்தார். அவர் அவர்களைப் பின்பற்றவும் நிராகரிக்கவும் மாதிரிகளை வழங்கினார். மேலும் அவர் தனது தகவல்களை தனது பார்வையாளர்களினுடைய உலகின் நிழலோட்டங்கள் அல்லது சூசகங்களாக வடிவமைத்தார்.

சில சமயங்களில், மோசே இந்த இணைப்புகளை வெளிப்படையாக செய்தார். உதாரணமாக, ஆதியாகமம் 15:12-16 இல், மோசே தனது பார்வையாளர்களுக்கு எகிப்திலிருந்து வெளியே கொண்டு வருவதாக தேவன் கொடுத்த வாக்குத்தத்தின் பின்னணியைப் பற்றிக் கூறினார். இந்த வாக்குத்தத்தமானது அவர்களின் நாட்களில் நிறைவேற்றப்பட்டது. ஆதியாகமம் 2:24 இல், ஆதாம் மற்றும் ஏவாளின் திருமணமானது தேவனுடைய விசுவாசமுள்ள மக்களிடையே திருமணத்திற்கான ஒரு மாதிரி என்று மோசே விளக்கினார். மற்றும் ஆதியாகமம் 25:23 இல், மோசே, தங்களுடைய தாயின் வயிற்றில் யாக்கோபு மற்றும் ஏசாவுக்கிடையேயான மோதலானது அவரது உண்மையான இஸ்ரவேலர்களாகிய பார்வையாளர்களுக்கும் அவர்களுடைய காலத்தில் இருந்த ஏதோமியர்களுக்கும் இடையிலான போராட்டத்தின் நிழலோட்டமாக இருந்தது.

”அந்த உலகம்” மற்றும் ”அவர்களின் உலகம்” ஆகியவற்றுக்கு இடையேயான வெளிப்படையான தொடர்புகள் பஞ்சாகமங்களில் அங்கும் இங்குமாகக் காணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலும், இந்த இணைப்புகள் மறைமுகமாக இருந்தன. எனவே, இலக்கிய விளக்கத்தின் முதன்மையான பணிகளில் ஒன்று, மோசே கடந்த காலத்தின் ”அந்த உலகத்தை” தனது உண்மையான பார்வையாளர்களுடைய ”அவர்களின் உலகத்துடன்” எவ்வாறு இணைத்தார் என்பதை கண்டறிவது இலக்கிய பகுப்பாய்வின் பணியாகும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, மோசேயின் ஆகமங்களைப் பற்றிய வியாக்கியானம் இலக்கிய பகுப்பாய்வை விட கருப்பொருள் மற்றும் வரலாற்று உத்திகளை வலியுறுத்தியுள்ளது. எனவே, மோசேயின் புத்தகங்களைப் பற்றிய நமது பாடங்களில், இலக்கிய வியாக்கியானத்திற்கு நம் பெரும்பாலான நேரத்தை ஒதுக்குவோம். மோசே தனது பார்வையாளர்களின் அனுபவங்களின் பின்னணி, மாதிரிகள் மற்றும் நிழலாட்டங்களை வழங்குவதற்காக அவரது ஒவ்வொரு புத்தகத்தின் உள்ளடக்கத்தையும் எவ்வாறு வடிவமைத்தார் என்பதை நாம் வெளிக்கொண்டுவருவோம். மோசே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தனது உண்மையான பார்வையாளர்களுக்காக என்ன வலியுறுத்தினார், அவர் தனது புத்தகங்களின் உள்ளடக்கத்தை எவ்வாறு அவர்களுடைய வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தினார், அவருடைய உண்மையான இஸ்ரவேலர்களாகிய பார்வையாளர்களை எவ்வாறு தேவனை உண்மையாய் சேவிக்கும்படி வழிநடத்தினார் என்பதை நாம் ஆராய்வோம்.

# முடிவுரை

இந்த பஞ்சாகம அறிமுகத்தில், வேதாகமத்தின் இந்தப் பகுதிக்கான நவீன விமர்சன அணுகுமுறைகளின் சில முக்கிய அம்சங்களை ஆராய்ந்தோம். முக்கியமான வியாக்கியான அறிஞர்களின் முன்கணிப்புகள் எவ்வாறு பஞ்சாகமங்களின் நூலாசிரியர் மற்றும் குறிப்பிட்ட வகையான விளக்கங்களின் சில கருத்துக்களுக்கு இட்டுச் சென்றன என்பதை நாம் கருத்தில் கொண்டோம். நவீன சுவிசேஷக் கண்ணோட்டங்களையும் நாங்கள் பார்த்திருக்கிறோம், நவீன சுவிசேஷ மார்க்கத்தார்களின் முன்கணிப்புகள் எவ்வாறு நூலாசிரியர் மற்றும் விளக்கம் பற்றிய மாறுபட்ட பார்வைக்கு வழிவகுத்தன என்பதைப் பார்த்தோம்.

நாம் தொடர்ந்து பஞ்சாகமங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த அறிமுகக் கருத்தாடல்கள் பல முறை முன்புறமாக நகர்வதைக் காண்போம். அவர்கள் செய்வது போல், வேதாகமத்தின் இந்த அடித்தளப் பகுதியைக் கையாள்வதற்கு நாம் சிறப்பாக தயாராக இருப்பதைக் காண்போம். வழியில், இதுபோன்ற கேள்விகளை நாம் கருத்தில் கொள்வோம்: பஞ்சாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்தையும் மோசே ஏன் எழுதினார்? இந்த புத்தகங்களின் உண்மையான நோக்கம் என்ன? முதல் பார்வையாளர்கள் மீது பஞ்சாகமங்கள் உண்டாக்கின தாக்கங்கள் என்ன? இந்த வகையான கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம், மோசேயின் உண்மையான அர்த்தத்தை நோக்கிய முக்கியமான நோக்குநிலைகளை நாம் கண்டுபிடிப்போம். வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் மோசேயின் காலத்தில் இஸ்ரவேலின் விசுவாசத்தின் ஆரம்பத் தரமாக எவ்வாறு செயல்பட்டன என்பதைப் பார்ப்பது மட்டுமல்லாமல், இன்று கிறிஸ்துவைப் பின்பற்றும்போது இந்தப் புத்தகங்கள் எப்படி நம் நம்பிக்கையின் தரமாக இருக்க வேண்டும் என்பதையும் கண்டுபிடிப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.